விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 02 வியாழக்கிழமை (18.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

# தமிழர்களுடன் பேசினால் ஆதரவை இழப்பார் ஜனாதிபதி

## தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை தமிழ்க் கட்சியுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள தேசிய அமைப்புகள் அவருக்கு ஆதரவு வழங்காது என தேசிய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ வின் அனுசரணையில் செயற்படும இந்த அமைப்பு நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் மாநாடுகளை நடத்தி ஜனாதிபதித் தேர்தலை இல க்கு வைத்து சர்வதேசத்திற்கு வழ ங்குவதற்காக பல்வேறு யோசனைகள் அடங்கிய 15 யோசனை களை கொண்டு வந்துள்ளன.

இந்த யோசனைகள் குறித்து ஜனாதிபதி விசேடமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த 15 யோசனைகளின் அடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அகிம்சை வழியில் தமிழ்

20 ஆம் பக்கம் பார்க்க....

## நோர்வேத் தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே நாட்டுத் தூதுவர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல்வேறு தரப்பினர்களைச் சந்தித்து வடக்கின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந் துள்ளார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் நேற்று முன்தினம் வடக் கிற்கு விஜயம் மேற்கொண்டு கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிற்குச் சென்று மாவட்ட

20 ஆம் பக்கம் பார்க்க....

அன்பு வாசகர்களே...
நாளை முதல் உங்கள்
**வலம்புரியில்**
ஜோதிட கலாமணி
சிவல்புரி சிங்காரம் எழுதும்
புரட்டாதி மாத இராசி பலன்
வாசிக்கத் தவறாதீர்கள்

## நேபாள அமைச்சர் இன்று வருகை

(கொழும்பு)

நேபாள வெளிவிவகார அமைச்சர மகேந்திர பகதூர் பாண்டே இன்று இலங்கை வரவுள்ளார் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

18 ஆவது சார்க் மாநாட்டுக்கான அழைப்பிதழைக் கையளிக்கவே அவர் இலங்கை வருகிறார் என்று அர சாங்க தகவல் திணைக்களம் குறிப்பி ட்டுள்ளது.

நேபாளத்தலைநகர் காத்மாண்டில நவம்பர் மாதம் 18 ஆவது சார்க் மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (எ-11)

## புதிய குழுவை அனுப்ப உத்தேசம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மேற் கொண்டு வரும் உள்நாட்டு விசார ணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவ தற்காக, ஐ.நா. புதிய குழுவொன்றை அனுப்பிவைக்க விருப்பதாக தெரிவிக்க பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள்சபையின் வெளிவி வகார பிரிவின் கீழ் இந்த குழு நியமனம் செய்யப்படவுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் உள் நாட்டு விசாரணைகள் உள்ளிட்ட பொறி முறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஐக்கிய நாடுகளின் பொது செய லாளர் பான் கீ மூன் இந்த நடவடிக் கையை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட செய்தி ஊட கமான இன்னர் சிட்டி பிரஸ் செய்தியை வெளியிட்டிருக்கிறது. (எ-11)

## சீனாவின் பிடியினுள் இலங்கை நிரூபித்தது நீர்மூழ்கிக்கப்பல்

(கொழும்பு)

சீனா ஜனாதிபதியின் இலங்கை விஜயத்திற்கு சற்று முன்னதாக அந்த நாட்டின் அணுவாயுத நீர் மூழ்கிக் கப்பலொன்று இலங்கை துறைமுகத்தின் சீனாவிற்கு சொந் தமான சிஐசிடி இறங்குதுறைக்கு சென்றதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ஜான்ங் ஜென்ங் 2 என்ற நீர் மூழ கிக் கப்பலே இவ்வாறு துறைமுக த்திற்குள் நுழைந்துள்ளது.

குறிப்பிட்ட நீர்மூழ்கி துறை முகத் திற்குள் நுழைந்த வேளை வெளியே இரு யுத்த கடற்படை கப்பல்கள் நங்கூரமிட்டிருந்ததாகவும் தெரிவி க்கப்படுகின்றது.

இதேவேளை நீர்மூழ்கியின் பிரசன்னம் குறித்து இலங்கை கடற் படையினர் அறிந்திருக்கவில்லை என்றும் யுத்த கப்பல்கள் குறித்து

20 ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் செல்வாக்கு பெற்றவர் பிரபாகரன்

(03 ஆம் பக்கம் பார்க்க...)



## மாலைதீவு ஜனாதிபதி இன்று வருகிறார்

(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் லாஹ் யமீன் அப்துல் கையூம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வ தேச மாநாட்டில் கலந்து கொள்வத ற்காகவே மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகிறார் என வெளி விவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இன்று வியாழக்கிழமை கொழு ம்பில் ஆரம்பமாகவுள்ள இந்த மாநாடு 20 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (எ-11)

## வாழ்க்கைச் செலவைக் குறைக்க மகிந்த அரசினால் முடியாது

### ரணில் ஆதங்கம்



(கொழும்பு)

எரிபொருள் விலைகள் குறைக் கப்பட்ட போதிலும் மக்களின் வாழ் க்கைச் செலவை குறைப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்த லின் தோல்வியை ஒப்புக்கொண்டு அரசாங்கம் சொற்பளவில் எரிபொரு ளுக்கான விலைகளை குறைத்து ள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் அமைச்சர்களை கண்காணிக்க வேண்டும்

### பொது பல சேனா வேண்டுகோள்

(கொழும்பு)

அமைச்சரவையில் உள்ள முஸ் லிம் அமைச்சர்களை புலனாய்வு பிரிவின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருமாறு பொது பல சேனா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி டிலான்தே விதானகே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் தீவிர வாதம் உள்ளதாக தாங்கள் விடுத்து வரும் எச்சரிக்கை உண்மையாக மாறிவருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கை முஸ்லிம்கள் உளவா ளிகளாக பயன்படுத்தப்படுவது குறி த்த இந்திய தகவல்களை சுட்டிக்கா ட்டியுள்ள அவர் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இலங்கையி லிருந்து செயற்படும் முஸ்லிம் தீவிர வாதிகள் இந்தியாவையும் தெற காசியாவையும் பலவீனப்படுத்த முயல்கின்றனர் என்பதே உண்மை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

அதிரடியான புதிய வரவுகள்
ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க
மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க IELTS
தேவையே இல்லை O\L போதும்
செங்கன் நாடுகள் சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி
படிக்க உழைக்க 2 வருட விசா 100% விசா உறுதிப்பாட்டுடன்.
அனைத்தும் நிபந்தனைகளுடன். சனி,ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்
இறுதித் திகதி : 19.09.2014
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
அரச பதிவு - PV82703
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
(762)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 0000

## வடக்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்

### அரசுக்கு யாழ்.ஆயர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய அரசுடன வடக்கு மாகாண சபை இண ங்கிச் செயற்படவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ள அதே வேளையில் மத்திய அரசாங் கமே மாகாண அரசாங்கத் திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக வடக்கு முதல்வ ரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி

20 ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விரோதச் செயல்களை மறைக்கவே எரி பொருட்களின் விலை குறைப்பு

## மாவை எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசின் கடந்தகால மக்கள் விரோதச் செயற்பாடுகளை மூடி மறைக்கும் உபாயம் தான் பெற்றோல், டிசல், மணணெணணெய், மின்சாரக் கட்டணங்களின் விலை குறைப்பு என்றும் தேர்தலுக்கும் சிலநாட்களே இருக்கின்ற நிலையில் அரசின் இத்தகைய அறிவிப்புக்களானது அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறலென்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிர்வாக அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி சர்வாதிகாரத்தனமாக தேர்தல் விதிமுறைகளையும் ஜனநாயக விழுமியங்களையும் மீறிச் செயற்படுவது இதன் மூலமாக தெளிவாக எடுத்துக்காட்டப்படுவதாகவும் எனவே இதறகு மக்கள் இடம் கொடுக்காது தெளிவாகச் சிந்தித்து தமது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டு மென்றும் கேட்டுள்ளார்.

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல், மின்சாரகட்டணம் ஆகியவற்றின் விலைகளும் கட்டணங்களும் குறைக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற இந்த அரசாங்கம் தேர்தல் காலத்தில் மட்டும் அதனை மூடி மறைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. இது போன்ற அறிவிப்புக்களின் மூலமாக மக்களை ஏமாற்றி மீண்டும் மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவே முயல்கின்றமையை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கு தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சில நாட்களே எஞ்சியிருக்கின்ற நிலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் குறைக்கப் போவதாகச் சொல்லி இருக்கின்றமையானது ஜனநாயக விரோத தேர்தல் விதிமுறைகளை மீறும் நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

இங்கு நிர்வாக அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி சர்வாதிகாரத்தையே திணித்து தேர்தல்களில் வெற்றிகளைப் பெற முயல்கின்றார். ஆகவே இதற்கு மக்கள் இடமளிக்காது தமது தேர்தல் கடமைகளை ஜனநாயக உரிமைகளை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச் செலவு மிக அதிகரித்திருக்கின்ற இந் நேரத்தில் தேர்தல் காலத்தில் மட்டும் அரசாங்கத்தினால் விடுக்கப்படுகின்ற அறிவிப்புக்களை ஏற்றுக் கொள்ளமுடியாத அதேவேளையில் மக்களுக்கு மீண்டும் ஏமாற்றத்தையே ஏற்படுத்துவதாக அமையுமென்று நினைக்கிறோம்.

இதேபோன்று குறிப்பாக இந்தியாவை எடுத்துக் கொண்டால் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இத்தகைய எந்த அறிவிப்புக்களையும் விடுக்கமுடியாது. ஆனால் இங்கு அவ்வாறில்லாமல் அரசாங்கம் நினைத்ததனைச் செய்துவருகின்றது. அரசாங்கம் எதனைச் செய்தாலும் மக்கள் தான் சிந்தித்துச் செயற்படவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

ஏனெனில் அரசினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மூடி மறைக்கும் வகையில் அரசின் அறிவிப்புக்கள் அமைகின்றன. இந்நிலையில் தேர்தல் முடிவடைந்த பின்னர் மீண்டும் அதிகரிப்பு அறிவித்தல்களே வருமென்றே மக்கள் கருதுகின்றனர். ஆகவே தேர்தல் காலத்தில் மட்டுமல்ல தொடர்ந்தும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் மக்கள் விரோதச் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (எ-11)

# மொனராகலையில் சிறுநில அதிர்வு!

(கொழும்பு)

மொனராகலை எதிமலே பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.10 அளவில் சிறு அளவிலான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு இரண்டு ரிக்டர் அளவுக்கும் குறைவானது என மொனராகலை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நில அதிர்வு குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நில அதிர்வு காரணமாக சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என குறிப்பிடப்படுகிறது. (எ-11)

# நாடு திரும்பினார் சீன ஜனாதிபதி

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உள்ளிட்ட குழுவினர், நேற்று பிற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நாடு திரும்பினர்.

சீன ஜனாதிபதியை வழியனுப்புவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றனர்.

பிரதமர் தி.மு.ஜயரத்ன, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் ஹெலிகொப்டரொன்றில் விமான நிலையத்துக்குச் சென்று சீன ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினரை வழியனுப்பினர்.

விமான நிலையத்தில் வைத்து சீன ஜனாதிபதிக்கு விமானப்படையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# குழந்தையைக் கொன்றவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு!

(புத்தளம்)

புத்தளத்தில் இரண்டரை வயது குழந்தையை கொலை செய்த நபருக்கு புத்தளம் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

புத்தளம் நெடுங்குளம் என்னும் இடத்தில் இறைச்சி விற்பனை செய்யும் நிலையமொன்று தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக, இரண்டரை வயது குழந்தை ஒன்றை கத்தியால் குத்திக் கொலை செய்த நபருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் உயர் நீதிமன்ற நீதவான் பிரியந்த பெர்னாண்டோ மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

49 வயதான இப்ராஹிம் ஜனாப் என்ற நபருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2006-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16-ம திகதி குழந்தையின் தாத்தா மீது நடத்திய தாக்குதல் தவறுதலாக குழந்தை மீது பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# ரயில்முன் பாய்ந்து பெண் மரணம்

(கொழும்பு)

வடக்கு ரயில் பாதையில் அனுராதபுரம் 244 ஆம் மைல்கல் பகுதியில் பெண்ணொருவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி வந்த ரயிலில் முன்பாய்ந்தே இவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மஹாஆராச்சிமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 58 வயதான பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# நாட்டில் பால்மா குறித்த விளம்பரங்களுக்குத் தடை

(கொழும்பு)

இலங்க்கயில் பால்மா தொடர்பான விளம்பரங்களை ஊடகங்களில் பிரசாரம் செய்ய தற்காலிக அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால இந்த தகவலை உறுதி செய்துள்ளார்.

மீள அறிவிக்கும் வரையில் ஊடகங்களில் பால்மா தொடர்பான விளம்பரங்களை பிரசாரம் செய்யக் கூடாது.

இது தொடர்பில் ஊடக நிறுவனத் தலைவர்களிடம் எழுத்து மூலம் கோரியுள்ளோம். பால்மா விளம்பரங்களின் போது தேவையற்ற தூண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக விளம்பரங்களுக்கு தடை விதிக்க தீர்மானித்தோம்.

தேவையற்ற தூண்டுதல்களில் ஈடுபடும் சகல பால்மா விளம்பரங்களையும் பட்டியல் படுத்தி ஒழுங்கு செய்யும் வரையில், பால்மா விளம்பரங்களை தற்காலிக அடைப்படையில ஊடகங்களில் பிரசாரம் செய்ய தடை விதித்துள்ளதாக பாலித மஹிபால அறிவித்துள்ளார். (எ-11)


**கடை வாடகைக்கு**

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0774366704

(சி-8524)

**SPEED**
PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-8284) (சி-8519)

**After O/L & A/L**
Mega
தகவல் தொழினுட்பம், ஆங்கில கற்கைநெறிகளுக்கான
புலமைப்பரிசில் பரீட்சை 21st Sep.
ISO 9001:2008 சர்வதேச தர நிர்ணயக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள் மற்றும் சான்றிதழ்கள்
You can Win upto 75% scholarship
CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
இலவச பரீட்சை அனுமதி, மேலதிக விபரங்களுக்கு
யாழ்ப்பாணம்
2G ஸ்ரான்லி வீதி
021 2225677
புதிய பிரிவுகளுக்கான நேரடி பதிவுகள் தற்பொழுது ஆரம்பம்


# கண்ணீர் அஞ்சலி



**அமரர் சுப்பையா கோபாலசிங்கம்**

எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி பு.பாலசுப்பிரமணியம் அவர்களின் சகோதரனும் பழைய மாணவருமான அமரர் சுப்பையா கோபாலசிங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்
மு/யோகபுரம் ம.வி.யோகபுரம்.

(சி-8520)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் ஏக்கரை ஆட்டையைப்போடும் அரசு

கொழும்பை அண்டிய ஆயிரம் ஏக்கர் காணிகளை கைப்பற்றும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக சிங்கள நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காணப்படும் வர்த்தக ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த காணிகள் இவ்வாறு கைப்பற்றப்படவுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் நாளேடுக்கு தகவல் வழங்கியுள்ளார்.

பாரியளவிலான அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் இந்தக் காணிகள் கைப்பற்றப்படவுள்ளன.

இந்த காணிகள் மெய்யாகவே அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்படுமா? அல்லது காணிகள் அரசாங்கத்திற்கு நெருக்கமான வர்த்தகர்களுக்கு பகிர்தளிக்கப்படுமா? என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வி காணி சுவீகரிப்பு தொடர்பிலான சட்டத்தின் அடிப்படையிலேயே காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டும். அரசியல் அழுத்தங்களின் அடிப்படையில் காணிகள் கைப்பற்றப்படக் கூடாது. (இ

CIMA
Chartered Institute of Management Accountants
@ Wisdom
☎ 021 2220727 | 021 7200777

# புலிகளின் தலைவர் பிரபாகரன் மக்களின் செல்வாக்கு பெற்றவர்

## சிங்கள மக்கள் இதனை உணர வேண்டும்-முஸ்லிம் அமைச்சர் பஷீர் சேகுதாவூத்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் எம்.எச். எம். அஷ்ரப் ஆகியோர் மக்களின் செல்வாக்கு பெற்ற தலைவர்கள். இதை பக்குவமாக புரிந்து கொண்டாலே தேசிய ஐக்கியம் சாத்தியப்படும் என உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூர் தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச் எம். அஷ்ரபின் 14 ஆவது வருட சிரார்த்த தின நிகழ்வு ஏறாவூர் அல் அஷ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இங்கு அஷ்ரப் விரும்பிய தேசிய ஐக்கியம் என்ற நினைவுப்பேருரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரனை தமிழ் சமூகம் ஒருபோதும் மறக்க போவதில்லை. இறந்தவர்களிலோ உயிருடனுள்ள தமிழ்த் தலைவர்களிலோ தமிழ் மக்கள் மனங்களில் ஆகக்கூடிய செல்வாக்குடன் இறுதிவரை மதிக்கப்படக் கூடியவர் பிரபாகரனே.

இந்த அபிப்பிராயம் தெரிவிப்பதை பற்றி சிங்களப் பேரினவாதம் கோபித்தாலோ அரசாங்கம் கோபித்தாலோ நான் பயப்படபோவதில்லை. ஏனென்றால் நான் இஸ்லாத்தை விசுவாசித்தவன் என்ற அடிப்படையில் உண்மையைக் கூற ஒரு போதும் அஞ்சப்போவதில்லை. இவ்விடயத்தில் முன்னுக்குப் பின்



முரணாகப் பேசி எனக்கு பழக்கமில்லை.

மேற்கூறிய இதே விடயத்தைப் போல இலங்கை முஸ்லிம்களுக்குள் இன்றுவரையும் இன்னும் எதிர்காலத்தில் ஆயிரம் வருடங்கள் போனாலும் என்றென்றும் மக்களால் மதிக்கப்படக்கூடிய ஒரேயொருவர் மறைந்த மாபெரும் தலைவர் எம்.எச் எம். அஷ்ரப்பே இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

இதேவேளை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி மறுத்தாலும் சரி மறைத்தாலும் சரி இன்னுமொரு கசப்பான உண்மையையும் இங்கு பகிரங்கமாக கூறியேயாக வேண்டும். சிங்கள பௌத்த மக்களுக்குள் இன்னும் உயிரோடு இருப்பவர்களில் இந்தக் கொடிய யுத்தம் முடிவடைந்த பின்னர் அதிகூடிய செல்வாக்குடன் மக்கள் மனங்களில் அழியாத இடத்தைப் பிடித்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பதை எவரும் மறுதலிக்க முடியாது. கசப்பாயினும் இந்த உண்மையை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

அரசாங்கத்தின் கைக்கூலியாக இருந்து கொண்டு பஷீர் சேகுதாவூத் இத்தகைய கருத்தை பரப்புகிறார் என்று எவர் கூறினாலும் அதை நான் பொருட்படுத்தப்போவதில்லை. இந்த உண்மையை நான் பகிரங்கப்படுத்தியதற்காக நீங்கள் எனக்கு ஒரு வாக்கேனும் அளிக்காவிட்டாலும் பரவாயில்லை. இந்த அடிப்படை யதார்த்தங்களை இலங்கையில் வாழ்கின்ற எல்லா இன மக்களும் புரிந்து கொள்வது மிக முக்கியமானது.

இறந்த பின்னர் இன்னமும் தமிழர்களுக்குள் அதிகூடிய செல்வாக்குச் செலுத்தும் தலைவர் பிரபாகரனே என்பதை சிங்கள மக்கள் உணரவேண்டும்.

அதே போல மறைந்த பின்னரும் முஸ்லிம்களின் மனங்களில் மறையாமல் வாழும் மாபெரும் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப் என்பதையும் சிங்களப் பெரும்பான்மையும் தமிழரும் உணரவேண்டும்.

அதே போன்று சந்தேகத்திற்கிடமின்றி சிங்கள பௌத்த சமூகத்திற்குள் மிகப்பெரும் ஆதரவும் பலமும் பெற்ற ஏகோ பித்த தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்பதை தமிழரும் முஸ்லிம் சிறுபான்மையும் உணரவேண்டும்.

இந்த ஆழமான புரிதல்களுக்கூடாகவே தேசிய ஐக்கியம் என்பது சாகாவரம் பெற்று நிற்கும். அப்பொழுதே எமது நாடு ஒரு ஐக்கியப்பட்ட தேசம் என்பதையும் .இந்த நாடு சர்வதேசத்துக்கு மீண்டும் ஒருமுறை அடிமைப்படாது என்பதையும் நிரூபித்து தலை நிமிர்ந்து நிற்கும்.

எங்களை சிங்களவர்கள் ஆளக்கூடாது என்று நாம் கருதினால் அதற்குப் பதிலாக இந்தியனையோ அல்லது வெள்ளையனையோ ஆள அனுமதிக்கலாமா என்பதை எமக்குள் நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் எல்லாச் சமூகங்களும் சேர்ந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புகின்ற சம பங்காளிகளாக இருக்க வேண்டும். ஆகவே இன்று தமிழ்ச் சமூகத்திற்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இருக்கின்ற பேரம் பேசும் சக்தி என்பது ஐக்கியப்பட்ட குரல்தான்.

தேசியம் ஐக்கியம் என்பது மூன்று இனங்களின் இணைவே. இதில் எள்ளளவேனும் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. மூவினங்களின் மன நிலையும் கொள்கைகளும் ஒன்றாகப் பயணிப்பதே தேசிய ஐக்கியம் தேசிய ஐக்கியம் என்பது இந்த அரசாங்கத்தின் பங்காளிகள் என்பதிலேயே தங்கியுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

வர இருக்கின்ற பெரிய அரசியல் மாற்றத்தை சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளுவதற்கும் அதை கடந்து செல்வதற்கும் தங்களை தயார்ப்படுத்த வேண்டும்.

தலைவர் அஷ்ரப் இருந்த போது நாடு பிளவுபட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலியினர் நாட்டின் எந்தப்பாகத்திலும் எந்தத் தாக்குதலையும் நடத்தக்கூடிய வல்லமை பெற்றிருந்தார்கள். தமிழ் மக்களின் தேசிய விடுதலைச் சின்னமாக விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் இருந்தார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

## இன்றைய இராசி பலன்

**18.09.2014**

(புரட்டாதி 02, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00மணிக்கு
தசமி பின்னிரவு 2.56 மணிவரை
புனர் பூசம் முழுவதும்
இராகுகாலம் 1.33-3.03மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை

வளவன்

**மேடம்:** மனோ தைரியம் கூடும், சுவாரஸ்மான நாள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், செலவுகள் அதிகமாகும், போசன சுகக்குறைவான நாள், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், ரோக நிலையுண்டு.

**மிதுனம்:** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகமுண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்:** சோம்பலை விலக்குவது நல்லது, சுப செலவுகள் கூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** தனதானியச் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கன்னி:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், தொழிலில் ஊக்கத்துடன் பணிபுரிவீர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசனசுகமுண்டு.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், ஒரு சில கட்டுப்பாடுகளை சந்திக்க நேரிடலாம்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு:** மனோ தைரியமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், களஸ்திர நன்மையுண்டு, செல்வாக்கான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், பகைவர்கள் மனம் மாறுவர், முயற்சிகள் எளிதில் கை கூடும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**கும்பம்:** பணக்குறைவுகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்லும் திட்டத்தில் மாற்றம் உருவாக்கலாம்.

**மீனம்:** மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், பயணங்களில் பலனுண்டு, ரோக பலனுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்காத நிலையில் நெல்லியடியில் கிரைனட்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் வெடிக்காத கிரைனட் வெடி பொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




நெல்லியடி கொடிகாமம் வீதி கறுக்காய் பகுதியில் உள்ள தோட்டப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை 6 மணியளவில் இவ் வெடி பொருள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தோட்ட வேலை செய்து கொண்ட சில தோட்டத்தொழிலாளர்கள் கொடுத்த தகவலின் படி நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று இவ் வெடி பொருளை மீட்டுச் சென்று இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இராணுவத்தினர் வெடிக்காத அவ் வெடி பொருளை வெடிக்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டனர் என நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-10)



நன்றி-மிரர்

# ஒய்வூதியங்களை பெறாதவர்கள் பிரதேச செயலகத்தை நாடுங்கள்

ஒய்வூதியர்களது மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகளை வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிடும் செயன்முறையானது இம் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

இம்மாதத்திற்கான ஓய்வூதியம் சில ஓய்வூதியர்களுக்கு உரிய திகதிகளில் அவர்களது ஓய்வூதியங்கள் வைப்பிலிடாமை தொடர்பாக ஆராய்ந்த போது வழங்கப்பட்ட தரவுகளில் சில தவறுகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டது.

அவ்வாறு உரிய திகதிகளில் ஓய்வூதியங்கள் வைப்பிலிடாத ஓய்வூதியர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தமது ஓய்வூதியங்களை பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை கண்டறிந்து திருத்தி கொள்வதுடன் இனிவரும் காலங்களில் காலதாமதமின்றி ஓய்வூதியங்களை சிரமமின்றி பெற்றுக்கொள்ள ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ

# ராஜனி திராணகமவின் நினைவு தின நிகழ்வுகள்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்கூற்றியல் துறையின் தலைவராகயிருந்த மருத்துவர் அமரர் ராஜனி திராணகமவின் நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் 20 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட அரங்கில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரைமக்களுடன்இணைந்துசமாதானம், ஜனநாயகம், ஒத்துழைப்பு என்பவற்றினை முன்னிறுத்திய ஓர் ஊர்வலம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்து ஆரிய குளம் வழியாக வீரசிங்கம் மண்டப்ம் வரை சென்று பொது கூட்டத்துடன் முடிவடையவுள்ளது.

மறுநாள் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதியும் ஜனநாயகமும் மிகுந்த சமூகம் தொடர்பான உரையாடல் களம் ஒன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இ

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

எழுது மட்டுவாழ் சவாரித்திடலில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 23 ஆவது படைப்பிரிவின் லெப்ரினன்கேணல் ஏ.எல். அமுனுகம பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் பங்கு பற்றும் இந்நிகழ்வில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-29)

# நோர்வே தூதுவர்-ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறேட்லோட்சன் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது வடமாகாணத்தில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கிறேட் லோட்சன் ஆளுநரிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

இச் சந்திப்பு யாழிலுள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ



## பயன்பாட்டுக்கான விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

வோர்டும் எனர்ஜி என்னும் நிறுவனம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்.வணிகர் கழகத்தின் பணிமனையில் சூரிய சக்தியை மிகவும் பயனுள்ள வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தக்கூடிய வகையிலான தொழில்நுட்பங்கள் பற்றிய தெளிவான விளக்கங்களை மக்களிடம் பகிரவுள்ளனர்.

ஆர்வமுடைய அனைவரும் இக் கூட்டத்தில் பங்குபற்றலாம் என யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ

## அனுபவ பூர்வமான நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் உலகில் அமைதி, சந்தோஷம், ஸ்திரத்தன்மை போன்றவற்றை உருவாக்குவதற்காக அனுபவபூர்வமான நிகழ்ச்சித்திட்டம்ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

உலக அமைதி தினமாகிய எதிர்வரும் 21 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் 135 நாடுகளில் ஆயிரக்கணக்கான அரங்கங்களில் ஒரே தலைப்பில் இந் நிகழ்சித் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது என பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய யாழ்ப்பாண இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பிரம்மகுமாரிகள் இராஜயோகநிலையம் ஒவ்வொரு நபரும் தம்மை சக்தி யூட்டிக் கொள்வதன் மூலம் உலகில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நோக்கில் இப் புதிய நிகழ்ச்சி திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சிறுவர்களுக்கான போட்டிகள் பல யாழ்.பொதுசன நூலகத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் 11 ஆம் திகதி 3 வயது தொடக்கம் 5 வயதிற்குட்பட்டோருக்கான கதை சொல்லுதல் அல்லது பாட்டுப்பாடுதல் மற்றும் வர்ணம் தீட்டல் ஆகிய போட்டிகளும் 12 ஆம் திகதி 6 வயது தொடக்கம் 7 வயதிற்குட்பட்டோருக்கான வர்ணம் தீட்டல் மற்றும் திருக்குறள் மனனப் போட்டிகளும், 18 ஆம் திகதி 8 வயது தொட க்கம் 10 வயதுக்குட்பட்டோருக்கான 5 நிமிட பேச்சுப் போட்டி மற்றும் 11 வயது தொடக்கம் 13 வயதிற்குட்பட்டோருக்கான கட்டுரைப் போட் டியும், 19 ஆம் திகதி 13 வயதிற்குட்பட்டோருக்கான பொது அறிவுப் போட்டி மற்றும் குறுக்கெழுத்து போட்டி ஆகியனவும் நடைபெறவுள்ளன.

பங்குபற்ற விரும்புவோர் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பொது நூலகத்தில் திங்கள் மற்றும் போயா விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிக்கான தலைப்புக்களை பொது நூலகத்தில் பதிவுக்ளை மேற்கொள்கின்ற பொழுது பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மாகாண மட்டத்திலான ஆங்கில தினப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. நாளை மறுதினம் 20 ஆம் திகதி எழுத்தாக்கம், உறுப்பெழுத்து, சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் வவுனியா இறம்பைக் குளம் மகாவித்தியாலயத்திலும் மன்னார் புனித சென்சேவியர் ஆண்கள் ம.வி, முல்லைத்தீவு ம.வி, கிளிநொச்சி ம.வி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி தனிப் போட்டிகளான கவிதை வாசிப்பு, தயார் செய்யப்பட்ட/ செய்யப்படாத பேச்சு ஆகிய போட்டிகள் கிளிநொச்சி ம.வியில் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி குழுப்போட்டிகள், நாடகப் போட்டிகள் (கீழ் பிரிவு/ மேற்பிரிவு) ஆகிய போட்டிகள் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# மாவை எம்.பிக்கு இன்று வரவேற்பு

இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக தெரிவாகியுள்ள மாவை சோ.சேனாதிராஜாவை வர வேற்கும் நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மானிப்பாய் தொகுதியின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள இந் நிகழ்வானது சுன்னாகத்தில் அமைந்துள்ள திசா விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

வவுனியாவில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா புதிய தலைவராக தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மானிப்பாய் தொகுதிக்கிளை மற்றும் அதன் மூலக் கிளை உறுப்பி னர்களையும் கட்சியின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாகிய அருண் செல்வராஜனை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

சென்னையில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் உளவாளியான இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருண் செல்வராஜனை ஆறு நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

பாகிஸ்தான் உளவாளியாகச் செயற்பட்ட இலங்கைத் தமிழரான அருண் செல்வராஜன் கடந்த 10ஆம் திகதி சென்னை சாலிகிராமத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டார். முதல்கட்ட விசாரணையில் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் இருவர், அருண் செல்வராஜனை மூளைச்சலவைச் செய்து உளவாளியாக மாற்றியது கண்டறியப்பட்டது.

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தும் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்த அருண் செல்வராஜன், அதன் மூலமாக பரங்கி மலை இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம், பாதுகாப்பு மிக்கதாக திகழும் துறைமுகங்கள் உள்ளிட்ட இடங்களைப் படம் பிடித்து பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். உளவாளியான தமீம் அன்சாரி அளித்த தகவலின் பேரில் கடந்தாண்டு மண்ணடியில் ஜாகீர் உசேன் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த முகமது சலீம், சிவபாலன், ரபீக் ஆகியோரையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் அருண் செல்வராஜன் கைது செய்யப்பட்டார்.

பூந்தமல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைக்கப்பட்ட அருண் செல்வராஜனை 7 நாட்கள் காவலில் எடுத்து விசாரணை செய்ய அனுமதி கோரி தேசிய புலனாய்வு பொலிஸார் கடந்த 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் மனு செய்திருந்தனர்.

அந்த மனு மீதான விசாரணை நேற்று நடந்தது. புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அருண் செல்வராஜன், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மனுவை விசாரித்த நீதிபதி மோனி, அருண் செல்வராஜனிடம் பொலிஸ் விசாரணைக்கு செல்ல விருப்பமா? என்று கேட்டார். அதற்கு அருண் செல்வராஜன் எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அருண் செல்வராஜனை 6 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அருண் செல்வராஜனுடன், அவனது கூட்டாளிகள் 5 பேரும் தமிழகத்தில் ஊடுருவி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதேபோல், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அருண் செல்வராஜன் பணியாற்றியதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன.

இந்நிலையில், 5 கூட்டாளிகள் குறித்து அருண் செல்வராஜனிடம் விசா ரணை செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

மேலும், அருண் செல்வராஜன் தனி ஆளாக நின்று மிகப்பெரிய அளவான சதி திட்டத்தை செய்திருக்க வாய்ப்பு இல்லை எனக் கருதும் பொலிஸார், சென்னையில் அவருக்கு உதவிய முக்கிய பிரமுகர்கள் குறித்தும் விசாரணை நடத்தவுள்ளனர். (இ)

# எஸ்.எம்.எஸ். தடை

(கொழும்பு)

தொலைபேசிகளின் ஊடாக தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பதிவு செய்யப்பட்ட விளம்பரங்கள் மற்றும் பிரசார குறுஞ் செய்திகள் (எஸ்.எம்.எஸ்) அனுப்புவது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறாக அமையும்.

ஆகையால் வாக்களிப்பு ஆரம்பிக்கின்ற நேரத்துக்கு 48 மணி நேரத்துக்கு முன்னர் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அது தேர்தல் சட்டத்தை மீறும் நடவடிக்கையாகவே எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் அறிவித்--- துள் ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தலை மையப் படுத்தியே தேர்தல்கள் திணைக்களம் மேற் கண்டவாறு அறிவித்துள்ளது. (இ

# மாதா சொரூபம் சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை மேற்கு பகுதியில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த சிறிய மாதா சொருபம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு இனந் தெரியாதோரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

கடையொன்றின் சுவருடன் அமைக்கப்பட்டிருந்த மாதா சொருபமே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# ஊவா தேர்தலில் 50000 தமிழர் வாக்களிக்க முடியாத அவலநிலை

(கொழும்பு)

50 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகள் ஊவா மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளி மாவட்டங்களில் தொழில்களில் ஈடுபட்டு வரும் இளைஞர்,யுவதிகளுக்கே இவ்வாறு வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சவுமிய சரண சந்த சதய என்னும் மனிதவுரிமை அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கண்டி, யாழ்ப்பாணம் ,கொழும்பு மற்றும் நுவரேலியா மாவட்டங்களில் கடமையாற்றி வரும் இளைஞர், யுவதிகளே அதிகளவில் இவ்வாறு வாக்களிப்பில் பங்கேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைப்பின் தலைவர் பீ. அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் ஹோட்டல்கள் கடைகள் போன்றவற்றில் கடமையாற்றி வருவதாகவும் அவர்களுக்கு போதியளவு விடுமுறை கிடைக்காத காரணத்தினால் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் பேசவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்துறை சார் ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்கின்ற போதிலும் தனியார் துறை ஊழியர்களுக்கு இவ்வாறு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை எனவும் தனியார் ஊழியர்களுக்கும் வாக்களிப்பில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர்களின் உரிமை தொடர்பில் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்யவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (இ

# நன்றி நவிலல்

## செல்வத்தம்பி மாணிக்கவாசகர்



எமது அன்புத் தந்தை செல்வத்தம்பி மாணிக் கவாசகர் அவர்களின் பிரிவுத்துயரில் நேர டியாக சட்டத்துறை, நீதித்துறை சார்பாக கலந்து கொண்டு ஆறுதல் அளித்த அகில இலங்கை நீதிச்சேவை சங்கத்தலைவர் கௌரவ சுஜாதா அழகப்பெரும, நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் கௌரவ சிசிர ரட்நாயக்கா, யாழ் மாவட்ட நீதிபதி நீதிபதி கௌரவ சதீஸ்குமார், ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி கௌரவ லெனின் குமார், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கௌரவ கஜநிதி பாலன், வவுனியா மாவட்ட நீதிபதி திரு. இராமக்கமலன், முல்லைத்தீவு சட்டத் தரணிகள் சங்கம், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், சட்டமா அதிபர் கௌரவ பாலித பெர்ணாந்து, சொலிசிற்ற ஜெனரல் கௌரவ விஜய திலக, பிரதி சொலிசிற்ற ஜெனரல், மேலும் அரச சட்டத்தரணிகள், முன்னாள் அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் விஜயதாச ராஜபக்ச, அகில இலங்கை சட்டத் தரணிகள் சங்கச்செயலாளர் அஜித் பத்திரண மேலும் அனுதாபங்களை எனது குடும்பத்திற்கு தெரிவித்த கௌரவ பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களுக்கும் என் சார்பிலும், எனது குடும்பத்தாரின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

மாணிக்கவாசகர் கனேசராஜா மற்றும் குடும்பத்தினர்
மாவட்ட நீதிபதி மாவட்ட நீதிமன்றம் முல்லைத்தீவு


# கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 36 ½<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L /சாரதி (டோகா)<br>தொ.இ: B/3512 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 51 ¾<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, Civil Enginee ring – Following / எழுதுவினைஞர்<br>தொ.இ: G/3510 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 11 ½ சூரி செவ் 10 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/3514 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 72 ¼<br>தகைமை/தொழில்: B.Com<br>தொ.இ: G/3513 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 11 ¾ செவ் 4 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: HNDA / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/3519 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 64 செவ் 12 ல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3515 |
| பிறப்பு: 1983 கிறிஸ்தவம் (RC)<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Civil Engineering / பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3520 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 39 செவ் 2 ல்<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: Draftsman, Civil Engineering - Following<br>தொ.இ: G/3517 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைக்குற்றம் சாட்டப்பட்ட நபர் 9 ஆண்டுக்குப் பின்னர் விடுதலை

(கொழும்பு)

கொலைக்குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் நபர் ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட கொலை வழக்கில் எதிரியான நபர் குற்றச்சாட்டிலிருந்து ஒன்பது வருடங்களின் பின் விடுவிக்கப்பட்டார். மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த மேற்படி கொலை வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் எதிரியைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து நேற்று புதனகிழமை தீர்ப்பளித்தார்.

வாழைச்சேனை போக்குவரத்துச் சபை டிப்போவில் வாகன திருத்துனராக கடமையாற்றிய ஓட்டமாவடியைச் சேர்ந்த ஹமீத் லெப்பை முகைதீன் அப்துல் காதர் என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்தார் என அதே டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி ஹஸன் லாபீர் சமீம் என்பவர் மீது தண்டனைச் சட்டக் கோவை 296 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. கடந்த 2001.08.23 ஆம் திகதி ஓட்டமாவடி ஹாஜி வீதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் இக் கொலை தொடர்பில் 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் எதிரி ஹஸன் லாபீர் சமீமுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

வாழைச் சேனை போக்குவரத்துச் சபை டிப்போவுக்குள் மேற்குறித்த இருவருக்குமிடையில் இடம்பெற்ற தர்க்கத்தின் எதிரொலியா கவே கொலைச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப்பட்ட போதிலும் இந்த வழக்கில் சாட்சியமளித்த எட்டுப் பேரும் கொலை இடம்பெற்றதை கண்டனர் என சாட்சியமளிக்காது, முரண்பாடான சாட்சியங்களை நீதிமன்றில் அளித்தனர். மட்ட க்களப்பு மேல்நீதி மன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலி ங கம் முன்னிலையில் குறித்த வழக்கு விசா ரணை நடைபெற்றபோது எதிரி தொடர்ந்தும் தான் சுற்றவாளி எனத் தெரிவித்தார்.

அத்துடன் முக்கிய குற்றத்துக்குத் தேவையான எதிரி யார் என்பதை யும் வழக்குத் தொடுநர் தரப்பு அடையாளப்படுத்தவும் முன்வரவில்லை. இதனடிப்படையில் நேற்று குறித்த வழக்கில் சாட்சியங்கள் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறிய தாலும், எதிரிதான் கொலையைச் செய்தா ரென நம்பும்படியான சாட்சியமல்லாததாலும் குறித்த கொலைக் குறச் சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்து நீதவான் தீர்ப்பளித்தார். (இ)

# டி.ஜி.பி. தற்கொலை

சாரதா நிதி நிறுவன மோசடி வழக்கில் சி.பி.ஐ.யால் விசாரிக்கப்பட்ட அசாம் மாநில முன்னாள் டி.ஜி.பி. சங்கர் பருவா தற்கொலை செய்து கொண்டார்.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் செயறபட்டு வரும் சாரதா சிட்பண்ட் நிறுவனத்தில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு தொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி அசாம் மாநில முன்னாள் டி.ஜி.பி. சங்கர் பருவா வீட்டில் சி.பி.ஐ. பொலிசார் சோதனை நடத்தினர். மேலும், இது தொடர்பாக சங்கர் பருவாவிடமும் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. இந்நிலையில், நேற்று முன்தினம் டி.ஜி.பி. சங்கர் பருவா துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக அம்மாநில பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 40 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 50 | 70 | 100 |
| பூசணி | 30 | 25 | 40 |
| புடோல் | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 60 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 120 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 90 | 30 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 80 |
| கறிமிளகாய் | 40 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 60 |
| போஞ்சி | 100 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 90 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 |

# அரசிற்கு எதிராக கூட்டுச்சேர தயார்



அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பண்டார வளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஊவா மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஜே.வி.பி அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க ஜனநாயகக்கட்சி தயாராக உள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகள் ஒரே இலக்கினை நோக்கியே பயணிப்பதாக தெரிவித்துள்ளார்.


இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஆட்சியை அமைக்க பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது.

தனித்தனியான தளங்களில் போட்டியிட்ட போதிலும் பிரதான இலக்கு ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டியடிப்பதே என அவர் மேலும் குறிப்பிட்டார்.


இதேவேளை கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொழும்பில் சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட போது சேதமடைந்த வாகனம் தாக்குதல் தொடர்பான புகைப்படங்கள் என்பன தேர்தல் பிரசார மேடைக்கு அருகாமையில் காட்சிப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 103


ராகுலன் பாலா



சக்தி வேல்




துஷி துஷி




ரோஜா சிவா

நண்பன்1- உங்க வீட்டில ஒரே சிரிப்பு சத்தமா இருக்குதே ஏண்டா....?



நண்பன்2-அதுஒன்னுமில்லடா பொண்டாட்டி ஏதாவது பாத்திரத்தை என்மீது வீசுவா என்மேல் பட்டா அவ சிரிப்பா... படாட்டா நான் சிரிப்பேன். இப்படியே ஒரே தமாசுதான் போ...!

இப்படியும் ஒரே குடும்பமா?

பிரதீஸ் குமரன்

காதலி பேர பச்சை குத்திக்கறது ஒன்னும் பெரிய விஷயம் இல்ல.



ஆனா அதே பேரோட பொண்டாட்டி கிடைக்கறதுதான் கஷ்டம்

டிலானி நிரோசா

கழுதைக்கிட்ட நூறு ரூபா நோட்டைக் குடுத்தா அப்புடியே சாப்பிட்டிடும். ஆனா அதுக்குத் தெரியாது அதுல 5 கிலோ பழைய



பேப்பர்வாங்கி சாப்பிடலாம் ன்னு. அதனால் பணத்தை சரியான கழுதையா பாத்துக்குடுங்க.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரக் காணி வழங்கப்பட்டும் முன்பள்ளி அமைக்கப்படவில்லை

## கொக்கிளாய் மேற்கு கிராம மக்கள் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கொக்கிளாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தர முன்பள்ளி அமைக்கப்படவில்லையென பெற்றோர் தெரிவிக்கின்றனர்.




கடந்த 1984 ஆம் ஆண்டு சொந்த கிராமத்தை விட்டு வன்னி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இம் மக்கள் 26 வருடங்கள் கடந்த நிலையில் 27-09- 2010 அன்று கொக்கிளாய் மேற்கில் மீள்குடியேற்றப்பட்டனர்.

தற்போது 275 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக் குடும்பங்களில் 25 இற்கு மேற்பட்ட சிறார்கள் முன்பள்ளி இல்லாமையால் கொக்கிளாய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முன்பள்ளிக்கே சென்று வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் முன்பள்ளி அமைப்பதற்கென நிரந்தர காணி இருந்தும் அதற்கான கட்டடம் அமைக்கப்படவில்லை.

எனவே நிரந்தர காணியில் கிராமத்திற்கான முன்பள்ளியை அமைக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

# சிறுவர் இல்ல பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு உதவிகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள அன்பு சிறுவர் இல்லம், பாரதி சிறுவர் இல்லம், இனிய வாழ்வு இல்லம் ஆகியவற்றுக்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

குறித்த சங்கத் தலைவர் க.சுகாஸ் தலைமையில் சென்ற அங்கத்தவர்கள் இல்ல பிள்ளைகளை சந்தித்து கலந்துரையாடியதுடன் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள், உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் என்பனவற்றையும் வழங்கினர்.



ஏற்கனவே வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் மேற்படி இல்ல பிள்ளைகளின் வளர்ச்சிக்கென பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# குழாய்க்கிணறுகள் திருத்தப்படாமையால் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது

## கேப்பாப்பிலவு மாதிரி கிராம மக்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கேப்பாப்பிலவு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள மாதிரி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்கிணறுகள் நீர்வற்றியும் குழாய்க் கிணறுகள் சேதமடைந்தும் காணப்படுவதால் அவற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கேப்பாப்பிலவு கிராம சேவையாளர் பிரிவில் 373 குடும்பங்கள் 2012 இல் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் 10 பொதுக் கிணறுகளும் 10 குழாய்க்கிணறுகளும் அமைத்து மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இதில் 6 குழாய்க்கிணறுகள் கடந்த 8 மாதங்களாக திருத்தப்படாமையால் நீரைப் பெற முடியாதுள்ளதாக மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரு பொது கிணறுகள் நீர்வற்றியுள்ளதால் வீட்டுத்தோட்டம் மற்றும் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக அம்மக்களால் கூறப்படுகிறது.

மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் அப்பகுதிக்கு தற்காலிகமாக குடிநீர் சேவை இடம்பெற்று வருகிறது.

இருந்தும் இக்குடிநீர் சேவையானது மக்களின் நீர்ப்பிரச்சினையை பூரணமாக திருப்திபடுத்தவில்லை.

ஆதலால் சேதமடைந்துள்ள குழாய்க் கிணறுகளையும் பொதுக் கிணற்றினையும் திருத்துவதன் மூலம் நீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியுமென அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

# விளையாட்டு மைதானத்திற்கென கோரிய காணியில் பயிற்சி மையம்

## வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பிரதேச சபையால் கோரப்பட்ட காணி, வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதால் வழங்கப்படமாட்டாது என வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

விளையாட்டு மைதானத்துக்கான காணியை வவுனியா பிரதேச செயலாளர் இன்னமும் வழங்க வில்லை என வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் க.சிவலிங்கம் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார். இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

ஓமந்தைப் பகுதியில் பிரதேச சபையினரால் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக வேலி அடைக்கப்பட்டுள்ள காணி அரச காணியாகும். அதற்கு என்னிடம் அனுமதி பெறப்படவில்லை. அக் காணி விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வழங்கப்படமாட்டாது. ஏனெனில் அப்பகுதியில் வெளி நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி மையம ஒன்று அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ளது.

அதனையண்டிய பகுதியில் பாதிப்படைந்த சிறுவர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான பாதுகாப்பு நிலையமும தனித்தனியாக அமைக்கபடவுள்ளது. இதன் மூலம சமூகத்தில் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்கும் சிறுவர்களுக்கும் பெண்களுககும பாதுகாப்பை வழங்கி அவர்களையும் சமுகத் தின் சிறந்த மனிதர்களாக மாற்ற முடியும். இது தவிர இப்பகுதியில் இம் மூன்று கட்டடங்களும் அமைக்கப்பட்டு தொழிற்படுகின்ற போது அபபகுதியைச் சேர்ந்த பலருக்கும் வேலை வாய்ப்புக்களையும் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார். (2-250)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்கான சமூக சேவை உத்தியோகத்தர் இடமாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றிய சமூக சேவை உத்தியோகத்தரின் திடீர் இடமாற்றத்தை அடுத்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 40 ஆயிரத்து 413 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மீள்குடியேறிய மக்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளானவர்களாக இருப்பதன் காரணமாக இம் மாவட்டத்திற்கு சமூக சேவை உத்தியோகத்தர்களின் சேவை மிக அவசியமானது.

இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளன.

இம் மாவட்டத்தில் தற்போது மூன்று சமூக சேவை உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வந்த நிலையில் துணுக்காயில் கடமையாற்றிய சமூக சேவை உத்தியோகத்தர் திடீரென காரைநகர் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவ்விடமாற்றத்தை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களமே செய்துள்ளது.



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தற்போது 3 ஆயிரத்து 672 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 535 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது அப்பகுதிக்கு நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தர் இல்லாமையால் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் மக்கள் அல்லற்படுகின்றனர்.

ஒரு சமூக சேவை உத்தியோகத்தரை மாற்ற வேண்டிய தேவை இருப்பின் அப்பகுதிக்கு நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தரை நியமித்த பின்னரே இடமாற்றம் நடைபெற வேண்டும்.

இவ் இடமாற்றத்தை முல்லை மாவட்ட அரச அதிபர், முல்லைத் தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், வட மாகாண முதலமைச்சர் ஆகியோரின் அனு மதியை பெறாமல் வட மாகாண சமூக சேவை திணை க்களம் மேற்கொண்ட செயல் வருத்தமளிப்பதாக துணுக் காய் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு சமூக சேவை உத்தியோகத்தர்களே (மாந்தை கிழக்கு , ஒட்டுசுட்டான்) கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-267)

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட [illegible] மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு [illegible] காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அடையாள அட்டை கண்டெடுப்பு

(துணுக்காய்)


சாம்பல் தோட்டம், நெளுக்குளம் வவுனியாவைச் சேர்ந்த ஞானானந்தன் தினேசன் என்பவரின் 960242513V எனும் இலக்கமுடைய தேசிய அடையாளஅட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (2)





# அட அப்படியா?



பூமியில் நடந்த மாரத்தானில், விண்வெளியிலிருந்தே பங்குபெற்ற முதல் பெண் சுனிதா வில்லியம்ஸ்!



இந்தியர்கள் 2013 ஆம் ஆண்டில் சுமார் 120 தொன் அளவுக்கு காப்பி குடித்திருக்கிறார்கள் என்று இந்திய காப்பி வாரியம் தெரிவித்துள்ளது!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2014
18




- 1502- கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற்பயணத்தின் போது கொஸ்டாரிக்காவில் தரையிறங்கினார்.
- 1635- புனித உரோமப் பேரரசன் இரண்டாம் பேர்டினண்ட் பிரானஸ் மீது போர் தொடுத்தான்.
- 1739- பெல்கிரேட் நகரம் ஒட்டோமான் பேரரசிடம் கையளிக்கப்பட்டது.
- 1759- கியூபெக் நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1809- லண்டனில் றோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.
- 1810- சிலியில் முதலாவது அரசு அமைக்கப்பட்டது.
- 1812- மொஸ்கோவில் பரவிய தீ நகரின் முக்கால் பகுதியை அழித்துவிட்டு அணைந்தது. பெட்ரொவ்ஸ்கி அரண்மனையிலிருந்து நெப்போலியன் கிரெம்ளினுக்கு வந்தான்.
- 1851- நியூயோர்க் டைம்ஸ் இதழ் முதன் முதலில் வெளியிடப்பட்டது.
- 1895- புக்கர் டி. வாஷிங்டன் தனது புகழ்பெற்ற "அட்லாண்டா மத்தியஸ்தம்'. என்ற சொற்பொழிவை ஆற்றினார்.
- 1911- ரஷ்யப் பிரதமர் பீட்டர் ஸ்டோலிப்பின் கீவ் ஒப்பரா மாளிகையில் சுடப்பட்டார்.
- 1914- முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படைகள் ஜேர்மனியின் தென்மேற்கு ஆபிரிக்காவில் தரையிறங்கினர்.
- 1919- நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1922- உலக நாடுகள் அணியில் ஹங்கேரி இணைந்தது.
- 1924- மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21-நாள் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.
- 1934-சோவியத் ஒன்றியம் உலக நாடுகள் அணியில் இணைந்தது.
- 1939- இரண்டாம் உலகப் போர்: இக்னேசி மொஸ்கிக்கி தலைமையிலான போலந்து அரசினர் ருமேனியாவுக்கு தப்பினர்.
- 1943- இரண்டாம் உலகப் போர்: டென்மார்க் யூதர்களை வெளியேற்ற ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1959- வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.
- 1960- பிடெல் காஸ்ட்ரோ ஐ.நா கூட்டத்தொடரில் பங்குபற்ற நியூயோர்க் நகரை அடைந்தார்.
- 1962- ருவாண்டா, புருண்டி , ஜமெய்க்கா ஆகியன ஐ.நாவில் இணைந்தன.
- 1964- வியட்நாம் மக்கள் இராணுவம் தென் வியட்நாமினுள் நுழைந்தது.
- 1968 - இந்திய உளவுத்துறை நிறுவனம றா அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1972- இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகாண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.
- 1976- பெய்ஜிங் நகரில் மாசேதுங்கின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.
- 1977- வொயேஜர் 1 பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.
- 1980- சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.
- 1990-லிக்டன்ஸ்டைன் நாடு ஐ.நர்வில் இணைந்தது.
- 1997- 50.3 விழுக்காடு வேல்ஸ் மக்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2007- மியான்மாரில் பௌத்த பிக்குகள் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர்.

### பிறப்புகள்

- 1709-சாமுவேல் ஜோன்சன், ஆங்கில எழுத்தாளர் (இ. 1784)
- 1819 - லியோன் ஃபோக்கோ, பிரெஞ்சு இயற்பியலாளர் (இ. 1868)

### இறப்புகள்

- 1180 - ஏழாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி. 1120)
- 1783 - லியோனார்ட் ஆய்லர், சுவிட்சர்லாந்து கணிதவியல் அறிஞர் (பி. 1707)
- 1945 - இரட்டைமலை சீனிவாசன், ஆதி திராவிடர் இயக்கத் தலைவர் (பி. 1859)
- 1961 - டாக் ஹமாஷெல்ட், சுவீடனைச் சேர்ந்த ஐ.நா பொதுச் செயலர், நோபல் பரிசு பெற்றவர (பி. 1905)
- 1966 - வித்துவான் க.வேந்தனார், ஈழத் தமிழறிஞர் (பி. 1918)
- 1967 - ஜோன் கொக்ரொஃப்ட், பிரித்தானிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1897)
- 1978 - ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர், (பி. 1898)
- 2011 - டி.கே. கோவிந்தராவ், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1929)



உத்தரப்பிரதேசத்திலுள்ள கோரக்பூர் ரயில் நிலையத்தில் இருக்கும் பிளாட்பாரம்தான், உலகிலேயே மிக நீளமானது. இதன் நீளம் சுமார் ஒரு கிலோ மீட்டர்!

## அன்புச் சுட்டிகளே!

உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை, நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு செய்துகொள்ளலாம்.

### நீங்கள் செய்ய வேண்டியது....

உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம், உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி, உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,



ஆசிரியர்,சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல 03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...இலங்கைக் குழுவில் அதிரடி ஆட்டம் ஆடுபவர் இலங்கையின் சச்சின் என்று வர்ணிக்கப்படும் ஜெயசூரிய. எனவே, ஜெயசூரியவை வீழ்த்திவிட்டால்போதும். இந்தியா வென்ற மாதிரித்தான் என்று ரசிகர்கள் கணக்குப் போட்டனர். ஜெயசூரிய குறைந்த ரன்களுடன் ஆட்டம் இழக்கவே ரசிகர்கள் இந்தியாவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் அரங்கமே குலுங்கும் வகையில் குதூகலித்தனர். ஆனால், அடுத்து வந்த மஹானாமா மற்றும் அரவிந்த டி சில்வா ஆட்டத்தின் பேர்க்கையே புரட்டிப் போட்டனர். 251 ரன்களுக்கு அணியை அழைத்துச் சென்றனர்.

இவ்வளவு ரன்களை இலங்கை அணி எடுக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆரம்பத்திலேயே இலங்கையை ஜுஜுபி அணியாக எண்ணிய ரசிகர்கள் 251 ரன்கள் குவிக்கக் காரணமான அரவிந்த டி சில்வா மற்றும் மஹானாமா ஆட்டத்தைக் கண்டவுடன் அமைதி இழந்து தவிக்க ஆரம்பித்தார்கள். இருப்பினும் இந்தியர்கள் இந்த ரன்களை எளிதில் எடுத்துவிடுவார்கள். என்று நம்பினார்கள். ஆரம்பம் என்னவோ சூரத்தனமாகவே இருந்தது. 1 விக்கெட் இழப்பிற்கு 98 ரன்கள். சச்சின் பொறுப்புடன் ஆடி 65 ரன்கள் சேர்த்தார். எதிர்பாராத ஒரு பந்தில் ஏமாற்றப்பட்டு ஸ்டம்ப் ஆக தொடர்ந்து வந்த ஆட்டக்காரர்கள் சோனையாகச் சரிந்தனர். 120 ரன்களுக்கு 8 விக்கெட்கள் வீழ்ந்தன. இலங்கையின் ரன் குவிப்பையும்



### என்னைப்போலவே ஆடுகிறார்! பிராட்மென் புகழாரம்

எதிர்பார்க்கவில்லை. இந்தியா மோசமாக ஆடும் என்றும் எதிர்பார்க்கவில்லை. இறுதிப் போட்டிக்கு இந்தியா எளிதில் செல்லும் என்ற கனவுக் கோட்டை கண் முன்னே கண்ணாடி மாளிகை போல் நொறுங்க கொல்கத்தாவில் கூடிய 1,10,000 அதிகமான பிரம்மாண்ட ரசிகர் கூட்டம் வெறுப்பின் உச்சிக்கே சென்றது. இலங்கை வீரர்களை நோக்கி ஆரஞ்சுத் தோல், மினரல் தண்ணீர் பாட்டில் முட்டை, காகிதம் என அனைத்தையும் வீசி தங்கள் ஆத்திரத்தைத் தனித்துக் கொண்டனர். ஒருசில இடங்களில் நெருப்புகூட வைக்கப்பட்டது. காவல் துறை எவ்வளவோ முயன்றும் ரசிகர்களின் ரகளையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இலங்கை வீரர்கள் பாதுகாப்புக் கருதி ஆட மறுத்து பெவிலியன் திரும்பத் துவங்கின. நடுவராக இருந்த க்ளைவ் லாயிட் இலங்கை அணிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்க இலங்கை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. கிரிக்கெட் வரலாற்றிலேயே இதுபோன்ற நிகழ்ச்சி எப்போதும் நடைபெற்றதில்லை. கொல்கத்தா ரசிகர்களின் நடத்தையின் மீதான கரும்புள்ளியாகவே இது இன்றுவரை கருதப்படுகிறது. இலங்கை இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. ஆஸ்திரேலியா தான் வெற்றிபெறும் என அனைவரும் எண்ண, பலருடைய கணிப்புகளை பொய்யாக்கி இலங்கை வரலாறு காணாத வெற்றிபெற்றது. 1992 உலகக்கோப்பைப் போட்டிகளில் நடை பழகும் குழந்தையாக இருந்த இலங்கை 1996 இல் சாம்பியன்களாக ஆவார்கள் என்று யார்தான் கணித்திருக்க முடியும்?

இந்தியா உலகக் கோப்பையை இழந்தாலும் வழக்கம்போல் சச்சின் தனது பேட்டிங் கடமையைச் சரிவர செய்தார். சச்சின் ஆடிய 7 போட்டிகளில் எடுத்த மொத்த ரன்கள் 523. இரண்டு செஞ்சுரி. மூன்று அரை செஞ்சுரி. சராசரி 87 சதவீதம். இந்தப் போட்டிகள் அனைத்தையும் குறிப்பாக ஒரே ஒருவரின் ஆட்டத்தை ஒரு கிரிக்கெட் வி.வி.ஐ.பி தனது தள்ளாத வயதிலும் மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தார். அப்படி ரசித்த ஒருவர் கிரிக்கெட் பீஷ்மர் என்று அழைக்கப்படும் டான் பிராட்மென். அவரால் ரசிக்கப்பட்ட அந்த ஒருவர் நமது சச்சின். தனது ரசனைக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் அவர் கூறிய கமெண்ட் சச்சின் என்னைப்போலவே ஆடுகிறார் என்பதுதான். இதைவிட சச்சினுக்கு வேறு என்ன புகழுரை வேண்டும். வசிஷ்டர் வாயால் பெற்ற பிரம்மரிஷி பட்டம் அல்லவா இது. உலகக் கோப்பை முடிந்த கையுடன் சிங்கப்பூர் மற்றும் ஷார்ஜாவிற்கு இந்தியக் குழு பயணித்தது. இந்தியா, இலங்கை பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதின.

**கிரிக்கெட் பீஷ்மர் என்று அழைக்கப்படும் டான் பிராட்மென் அவர்களால் ரசிக்கப்பட்ட வீரர் நமது சச்சின். சச்சினைப்பற்றி அவர் கூறிய கமெண்ட் சச்சின் என்னைப்போலவே ஆடுகிறார் என்பதுதான். இதைவிட சச்சினுக்கு வேறு என்ன புகழுரை வேண்டும். வசிஷ்டர் வாயால் பெற்ற பிரம்மரிஷி பட்டம் அல்லவா இது!**

**கே. ரமேஷ்** (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...இதை நாம் கற்கும் பொழுது நாமே சுடுகாட்டிற்குச் செல்லும் காலம் வந்து விடுகிறது! வாழ்க்கையில் இதைத் தான் நாம் அனுபவம் என்கிறோம். இதைத் தான் நாம் அனுபவ வாயிலாகக் கற்பது என்கிறோம். உடலின் வயதுடன் அறிவைத் திரட்டுவது. பாடங்களைக் கற்பதற்கு நாம் வாழ்க்கை முழுவதையும் எடுத்துக் கொள்கிறோம். வயது ஏற, ஏற நாம் நமது இனிய சொந்த நடையில் கற்றுக்கொள்கிறோம்.

இன்னொரு பக்கம், முதல் தடவை நெருப்பைத் தொடுவதிலேயே எல்லா விதமான உருவத்திலும் நெருப்பு சுடும் என்பதைப் புரிந்துகொண்டால், நீங்கள் அறிவுள்ளவர். இதைக்கற்பதற்கு வயது தேவையில்லை. அறிவு மட்டுமே போதுமானது. இது உங்களுடைய மனதின் வயதைக் குறிக்கிறது. அதனால் தான் நாம் அறிவிற்கும் வயதிற்கும் சம்பந்தமில்லை என்கிறோம். இங்கு நீங்கள் எத்தனை அறிவுள்ளவர். விடயங்களைப் புரிந்துகொள்ள நீங்கள் உங்கள் உள் அறிவை எவ்வளவு தூரம் போஷித்து வளர்த்துள்ளீர்கள் என்பதே கேள்வி?

இதை நான் உங்கள் சொந்த வாழ்க்கையில் நடக்கும் விடயங்களிலிருந்தே விளக்குகிறேன். மாணவப் பருவத்தில் கல்லூரியில் இருக்கும் பொழுது ஒருவேலை கிடைத்தால் சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள்.


வேலை கிடைத்தவுடன் நீங்கள் நினைத்த எதிர்பார்த்த அளவு சந்தோஷமாக இல்லை, ஒரு கல்யாணமாகிவிட்டால் சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள். கல்யாணமான பிறகு குழந்தைகளைப்பெற்றால் சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள்.

ஒவ்வொரு ஆசையின் பின்னாலும் ஓடி, அது நிறைவேறினால் சந்தோஷமடைந்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள். இதுபோன்றே, வாழ்க்கையின் இறுதிக் கட்டம் வரை ஓடி ஓடி, பின்னர் எந்த ஆசையுமே உண்மையான சந்தோஷத்தைத் தருவதில்லை என்பதை உணர்ந்து, ஆன்மீகம் மற்றும் தியானத்தை நோக்கித் திரும்புகிறீர்கள்! இதுதான் வயதினாலும் அனுபவத்தினாலும் கற்றுக்கொள்ளும் ஒரு மனிதனின் வாழ்க்கை.

அறிவின் மூலமாகக் கற்பவன் எவனோ, அவனே முன்னேறிய மன- வயதையுடையவன். அவன் தன் முதல் ஆசையிலிருந்தே தெளிவாக உணர்ந்து கொள்கிறான்- எந்த ஆசையுமே நிறைவேறியவுடன்- உண்மையான சந்தோஷத்தைத் தருவதில்லை என்று; அங்கேதான் வித்தியாசமிருக்கிறது. அவன் முழுவதையும் பார்த்து அனைத்தையும் ஆராய்கிறான். உண்மையான நிறைவு உள்ளேயிருந்து வருகிறது. வெளியுலக விடயங்களிலிருந்து அல்ல என்பதைத் தெரிந்துகொள்கிறான்.

**ஆன்மீகம் 21**

இந்த அறிவை அடைவதற்கு நீங்கள் வயதானவராக இருக்க வேண்டியதில்லை. நிகழ்காலத்தில் இருந்தாலே போதுமானது. நீங்கள் நிகழ்காலத்தில் இருக்கும் பொழுது, இருப்புத் தன்மையே உங்களுக்குப் போதிக்கிறது. இருப்புத் தன்மை ஒரு சிறந்த குருவாகும். நாம் நிகழ்காலத்தில் இல்லாத பொழுது எப்பொழுது இறந்தகாலம் மற்றும் எதிர்காலத்தின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது கற்றுக் கொள்வதற்கு நமது இனிய நேரத்தை எடுத்துக்கொள்கிறோம், அவ்வளவே.



கடந்த காலங்களில், புத்தர், சங்கரர், ரமண மஹரிஷி, விவேகானந்தர் முதலிய குருமார்களின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டோமானால், இந்தியாவின் சரி த்திரத்தை உருவாக்கிய ஞானமடைந்த மனிதர்கள் அனைவருமே மிகச் சிறிய வயதிலேயே ஞானமடைந்திருக்கிறார்கள். எனவே, ஆன்மீகத்திற்கும் கற்பதற்கும் வயதிற்கும் எந்தவொரு தொடர்புமில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

அதனால்தான் உங்கள் வயது உங்களைப் பொறுத்தது என்கிறார்கள். அதன் பொருள் உங்கள் வயது உங்கள் மனதின் வயதைப்பொறுத்தது என்பதா கும். எனவே, உங்கள் வயது உங்கள் பக்குவத்தைப் பொறுத்தது.

**பரமஹம்ஸ சுவாமி** (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயிர்கொல்லி எபோலா

# வெளிநாட்டு இராணுவம் உதவ முன்வர வேண்டும்

மேற்கு ஆபிரிக்காவில் உயிர்க் கொல்லியான எபோலா நோய் பரவி வருவதைக் கட்டுப்படுத்து வதில் வெளிநாட்டு இராணுவங்கள் உதவ முன்வர வேண்டும் என எல்லைகளற்ற மருத்துவர்கள் என்ற தொண்டு நிறுவனம் சக்திமிக்க கோரிக்கை ஒன்றை முன்வைத்து ள்ளது.

எபோலாவைக் கட்டுப்படுத்து வதற்காக களத்தில் முன்னின்று செயலாற்றுகின்ற இந்த அமைப்பு மேற்கு ஆபிரிக்காவில் எழுந்துள்ள சூழ்நிலையால் திணறிவருவதாகக் கூறுகிறது.

வெளிநாடுகள் உடனடியாக இராணுவத்தினரையும் மருத்துவ உதவிக் குழுக்களையும் அனுப்பி நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவுக்கு மோசமான சூழ்நிலை காணப்படுவதாக அது தெரிவி த்துள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா வால் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை ஏற்கனவே இரண்டா யிரத்து ஐந்நூறைத் தாண்டியுள்ளது.

எபோலா நோய் பரவியுள்ள நாடுகளில் ஒன்றான லைபீரியாவில் பாதிக்கப்பட்ட மக்கள் தம்மிடம் இருநது குடும்பத்தாருக்கு இந்தக் கிருமி பரவக்கூடாது என்ற அக்க றையில் மருத்துவமனைக்கு தாங் களாகவே வந்து கதவைக் தட் டும் அளவுக்கு மோசமான சூழ் நிலை இருப்பதாக மெத்ஸன் சான்: பிராண்தியே என்ற இந்த அமைப்பு கூறுகிறது.

ஆனால் அந்த நோயாளிகளை சேர்த்துக்கொள்ள படுக்கைகள் இல்லாததால் மருத்துவர்கள் அவர்க ளைத் திருப்பி அனுப்ப வேண்டிய அவல நிலை காணப்படுவதாக அது தெரிவிக்கிறது.



மருத்துவமனையில் சேர முடி யாமல் நோயாளிகள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதால் அவர்களிடம் இருந்து மற்றவர்களுக்கு தொடர்ந்து நோய் பரவுகின்ற அபாயகரமான சூழல் நிலவுகிறது.

நிலைமையை சமாளிக்க முடி யாமல் திணறிவருவதாக எல்லை களற்ற மருத்துவர்கள் அமைப்பு கூறு கிறது.

இந்தச் சூழலில் தான் வெளிநாடு கள் தமது படையினரையும் மரு த்துவ குழுக்களையும் மேற்கு ஆபி ரிக்கா அனுப்பி எபோலாவைக் கட்டுப்படுத்த உதவ வேண்டும் என அது கோரியுள்ளது.


உடனடி நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படவில்லை என்றால் இந்த நோயால் உயிரிழக்க நேரி டுவோரின் எண்ணிக்கை பத்தா யிரங்கள் கணக்கில் இருக்கும் என உலக சுகாதார நிறுவனமும் எச்சரி த்துள்ளது.

அனைத்து தரப்பிலிருந்தும் உதவியும் ஒத்துழைப்பும் வேண் டும் என எபோலா சம்பந்தமான ஐ.நா ஒருங்கிணைப்பாளர் டேவிட் நபார்ரோ கூறினார்.

அரசாங்கங்கள் சர்வதேச அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், சிவில் சமூகக் குழுக்கள், வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் குறி ப்பாக உலகவங்கி, ஆபிரிக்க வங்கி போன்றவை தனியார் கொடை யாளிகள் அறக்கட்டளை கள் என எல்லா தரப்புகளும் ஒன் றிணைந்து மிகப் பெரிய நடவடி க்கையை முன்னெடுத்தால் மட் டுமே நிலை மையை சமாளி க்க முடியும் என அவர் தெரிவித் தார்.

இதனிடையே எபோலாவை கட்டுப்படுத்துவது தொடர்பில் மேற்கு ஆபிரிக்காவுக்கு மூவாயிரம் துருப் பினரை அனுப்புவதாக அமெரிக்கா வின ஜனாதிபதி அலுவலகம் அறிவி த்துள்ளது. (இ)

# இஸ்லாமிய அரசிற்கு எதிராக அமெரிக்க விமான தாக்குதல்



இஸ்லாமிய அரசு ஆயுததாரி களை எதிர்த்து மோதும் அமெரிக் காவுடைய புதிய தாக்குதல் வியூ கத்தின்கீழ் ஜிகாதி குழுவின் நிலை கள் மீது அமெரிக்கப் படைகள் முதல் வான் தாக்குதல்களை நடத்தியுள் ளன.

மோதல்களில் ஈராக்கிய பாது காப்பு படைகளுக்கு நேரடியாக ஆத ரவு வழங்கும் நோக்கத்தில் அமெரிக் காவின் யுத்த விமானங்கள் ஈராக் கின் வடபகுதியிலும் பக்தாத் அரு கிலும் உள்ள இலக்குகள் மீது குண் டுகள் வீசியுள்ளன.

ஜனாதிபதி ஒபாமா இந்த புதிய வியூகத்தை சென்ற வாரம் அறிவி ப்பதற்கு முன்பாக அமெரிக்கப் படை யினரை பாதுகாக்கும் நோக்கிலோ அல்லது மனிதாபிமான நோக்க ங்களுக்காகவே தான் முன்னதாக நடத்தப்பட்ட வான் தாக்குதல்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன என்று வோஷிங்டன் கூறி யிருந்தது.

சமீபத்தில் ஈராக்கில் பெருமள வான நிலப்பரப்புக்களை தாக்குதல் நடத்தி கைப்பற்றியுள்ள இஸ்லா மிய அரசு அமைப்பை எதிர்த்து போரிட பரந்துபட்ட சர்வதேசக் கூட் டணி ஒன்றை அமெரிக்கா உரு வாக்கி வருகிறது என்பது குறிப்பி டத்தக்கது. (இ




# இராணுவத் தொடரணியின் மீது ஆப்கானில் தற்கொலை தாக்குதல்

ஆப்கானிஸ்தானின் தலை நக ரான காபூலில் வெளிநாட்டு இரா ணுவத் தொடரணியை இலக்கு வைத்து தலிபான் அமைப்பினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கி ழமை மேற்கொண்ட தற்கொலை கார் குண்டுத் தாக்குதலில் 3 கூட் டுப்படையினர் மரணமடைந்துள் ளதாக நேட்டோ தெரிவித்து ள்ளது.

இதன்போது 16 பொதுமக்கள் காய மடைந்துள்ளனர். நான்காவது நேட்டோ படைவீரர் ஒருவர் படுகாயமடைந்து ள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன.

அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகில் விமானநிலைய வீதியில் போக்குவரத்து நெரிசல் இருந்த வேளையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நடைபெற்று முடிவடைந்த ஜனா திபதித் தேர்தல் முடிவு பற்றிய முரண்பாடு மற்றும் 2015 ஆம் ஆண்டளவில்பெரும்பாலான நேட்டோ படையினர் வாபஸ் பெறவுள்ள நிலையில் இந்தக் குண்டுத்தா ளக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# மெர்ஸ் வைரஸ் தொற்றுக்கு ஹஜ் பயணிகள் அஞ்சவேண்டாம்;

புனித ஹஜ் பயணத்துக்கு முன் னதாக, சவுதி அரேபியாவில் உயிர்க் கொல்லி "மெர்ஸ்" பரவும் சம்ப வங்களை தடுக்க தங்களாலான அனைத்தையும் செய்து கொண் டிருப்பதாக சவுதி அரேபியாவின் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.

ஹஜ் யாத்திரைதான் முஸ்லிம் கள் உலகளாவிய அளவில் மிகப் பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூடும் வருடாந்த நிகழ்வாகும்.

காய்ச்சலையும், இருமலையும் உருவாக்கும் இந்த மெர்ஸ் வைரஸ் அது தோன்றியதாக முதலில் தக வல் வந்த இரண்டாண்டுகளில் 300 இற்கும் மேற்பட்டோரைக் கொன்றுள்ளது.

இந்த வைரஸ் தொற்றை சமா ளிக்க அரசாங்கம் போதிய நடவ டிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் இன்னுமொரு முறை இந்தத் தொற்று பீடிக்காமல் இருக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக் கப்பட்டிருப்பதால், யாத்திரிகர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

ஆனால் உலக சுகாதார நிறு வனமோ, இந்த நிலைமை பொதுச் சுகாதாரக் கவலைகளை இன்னும் தோற்றுவிப்பதாகவும், யாத்திரி கர்கள் பயணத்தை மேற்கொள்வதற்கு முனனர் மருத்துவர்களிடம் ஆலோ சனை பெறுமாறும் கூறியிருக் கிறது. (இ)

# 16 வருடங்களுக்கு முன்னர் காணாமற்போன பெண் மீட்பு

## இலங்கையரின் உதவியால்

(சவுதி)

சவுதி அரேபியாவில் பணிப் பெண்ணாக சென்ற தமிழக பெண் ஒருவர் 16 வருடங்களாக வீட்டா ருடன் தொடர்பின்றி இருந்த நிலை யில் நேற்று முன்தினம் தமது குடும்பத்தாருடன் இணைந்துள் ளார்.

நயிமுன் என்ற இந்த பெண் 1998 ஆம் ஆண்டு சவுதிக்கு பணி க்காக சென்றார்.

அங்கு சென்றவுடன் வீட்டா ருடன் தொடர்புகளை இழந்த அவர், சவுதி எஜமானரின் வீட்டில் 16 வருடங்களாக சம்பளம் எதுவு மின்றி பணியாற்றி வந்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் இருந்து அவரின் குடும்பத்தினர் நயிமுனை தேடியபோதும் கண்டுபிடிக்க முடிய வில்லை.

இந்த நிலையில் சவுதியில் பணியாற்றும் அவரின் மகனும் சகோதரரும் இந்திய அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு நயி முனை கண்டுபிடித்துள்ளார்கள்.

நயிமுனுடன் பணியாற்றியதாக கூறப்படும் இலங்கை பணிப்பெண் ஒருவர் நாடு திரும்பிய நிலையில் அவர் தமிழகத்தில் உள்ள நயி முனின் குடும்பத்தாருக்கும் வழ ங்கிய தகவல்களின் அடிப்படையில் நயிமுன் இருக்கும் இடம் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து தமிழக அதி காரிகள் சவுதிக்கு சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட னர்.


இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் நயிமுன் அவரது மகன் மற்றும் சகோதரருடன் இணை ந்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த

# விஞ்ஞானி ஐன்ஸ்டீன்

பல மாணவர்களுக்கு சேர் ஐசாக் நியூட்டனைப் பற்றிக் கேட்டால் தெரியும் என்பார்கள். ஆனால் அல்பேர்ட் ஐன்ஸ்டீனைத் தெரியுமா என்று கேட்டால் தெரியாது எனப் பதிலளிப்பார்கள். 20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய மூளை என வர்ணிக்கப்ப்டுப்படுபவரும் (அணு குண்டு தயாரிக்க காரணமான) தலை சிறந்த விஞ்ஞானியுமான அல்பேர்ட் ஐன்ஸ்டீனைப் பற்றிய



வாழ்க்கை வரலாற்றை எழுதுகின்றேன். 6 ஆம் வகுப்புத் தொடக்கம் 13 ஆம் வகுப்பு வரை விஞ் ஞானம் கற்கும் மாணவர்கள் இவர் பற்றி கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். எனவே அன்பான மாணவர்கள் ஐன்ஸ்டீனின் வரலாற்றை ஒரு முறை படித்துப் பாருங்கள்.

நாம் இன்றைக்கு சாதி, சமயம், இனம், மொழி, நாடு எனப் பலவாறாகப்பிரித்துப்பார்க்கின்றோம். ஆனால் அறிவியல் கண்டுபிடிப்பிற்கு இது போன்ற பிரிவினைகள் கிடையாது. ஐன்ஸ்டீன் இக் குறுகிய கண்ணோட்டத்தை விடுத்து உலகை நேசித்தார்.

தன்னுடைய அணுகுண்டு கண்டுபிடிப்பால் மனித குலத்திற்கு ஏற்பட்ட பாதிப்பைக் கண்டு மனம் வருந்தினார். வாழ்நாள் பூராகவும் சமாதானத்திற்காகவும் போரிற்கு எதிராகவும் போராடினார். குரல் கொடுத்தார் அறிவியல் ஆக்கத்திற்கே பயன் படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மனித குலம் வாழ அறிவியலைப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார். இவர் தென் ஜேர்மனியில் உலம் நகரில் உட்டம்பர்க் என்ற ஊரில் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். இவர் தந்தை ஹெர்மன் ஆவார். இவர் மியூனிக்கல் நகரில் ஒரு சிறு இரசாயனக் கூடம் நடத்தி வந்தார்.

ஐன்ஸ்டீன் குழந்தைப் பருவத்தில் இருக்கவேண்டிய திறன் இல்லாதவராகவே இருந்தார். மூன்று வயது இருக்கும் போது தான் பேசத் தொடங்கினார். அவருக்கு ஐந்து வயது இருக்கும் போது அவரது தந்தை ஒரு காந்த திசைகாட்டியைக் கொடுத்தார். அதில் உள்ளமுள் எந்தப் பக்கம் வைத்தாலும் வடக்குத் தெற்காக நின்றது. காந்தமுள் இப்படி இருப்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ பின்னால் மறைந்து கொண்டு அதை இயக்குகின்றது என நினைத்தார்.

அவரது 6 ஆவது வயதில் ஜேர்மனியில் உள்ள வோல் ஷீல் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். பாடசாலைப் படிப்பில் அதிக கவனம் செலுத்தவில்லை. படிக்க தகுதியற்றவராகவும் முட்டாள் என்றும் கருதப்பட்டார். அவர் கணித பாடங்களில் மட்டும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். மற்றைய பாடங்களைச் சரி வரப் படிப்பதில்லை. அடிக்கடி கேள்வி கேட்டு மற்ற வர்களுக்கு தொந்தரவுக் கொடுத்துக் கொண்டே இருப்பார். ஒரு ஆண்டு செய்ய வேண்டிய கணித பாடத்தை மூன்று மணி நேரத்தில் செய்து முடித்தார். வகுப்பாசிரியருக்கே கடினமாகஇருந்தது ஆனால் இவருக்கு எளிமையாக இருந்தது.

அவர் கணிதத்தில் வரும் சந்தேகத்தை ஆசிரியரிடம் அடிக்கடி கேட்பார். ஆசிரியர் ஒருமுறை கூறினார். நீ அடிக்கடி என்னை சந்தேகம் கேட்கும் போது நான் பதில் சொல்லாமல் தடுமாறுவதால் ஏனைய மாணவர்கள் என்னை கேவலமாக நினைக்கிறார்கள் நீ கேள்வி கேட்பதை நிறுத்தினால் அல்லது வேறு பாடசாலைக்குச் சென்றால் நான் சந்தோசப்படுவேன் என்றார். அந்தளவிற்கு இவர் கணித பாடத்தில் திறமை பெற்றிருந்தார்.

அக்காலத்தில் ஜேர்மன் சிறுவர்கள் போர் வீரர்கள் மீது மிகுந்த ஆர்வம் கொண் டிருந்தார்கள். ஒரு நாள் படை வீரர்களின் அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஐன்ஸ்டீன் சோகமாக நின்று பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஒரு படைவீரன், தம்பி நீ கவலைப்படாதே நீயும் ஒரு நாள் எங்களைப் போல் அணி வகுப்பாய் எனக் கூறினார். அவர் கூறினார், நான் படை வீரனாக வர ஆசைப்படவில்லை. ஏனெனில் அது ஒரு இயந்திரம் போல ஒன்றையே திரும்பதிரும்ப செய்வதாக உள்ளது. சுயமாக எதுவும் செய்யும் படி படை வீரர்கள் இல்லை என்றார்.

ஐன்ஸ்டீனுக்கு 15 வயது இருக்கும் போது குடும்பத்தில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டதன் காரணத்தால் சுவிட்சர்லாந்தில் தன் உறவினர் வீட்டிற்கு சென்றார். அங்கு பாலிடெக்னிக் சேருவதற்கு தேர்வு எழுதினார். ஆனால் தேர்ச்சி பெறவில்லை. மீண்டும் பரீட்சை எழுதி தேர்வு பெற்று சுவிஸ் நாட்டில் உள்ள ஜுரிசில் கணிதமும் இயற்பியலும் படித்தார். அங்கு பட்டம் பெற்றார். அவருக்கு இசை, இலக்கியம், அறிவியல் ஆகிய மூன்றின் மீதும் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

படிப்பை முடித்தவுடன் வேலை தேடி அலைந்தார். வேலை கிடக்கவில்லை. 1902 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டில் பெர்ன் நகரில் பதிவுரிமை அலுவலகத்தில் வேலை கிடைத்தது. விஞ்ஞானிகள் கண்டு பிடித்த கண்டு பிடிப்புக்களை பதிவு செய்யும் அலுவலகம் அது அங்கு கணக்கர்வேலை கிடைத்தது. குறைந்த சம்பளம். அந்த வேலையில் அவருக்கு கிடைத்த அதிகளவான ஓய்வு நேரமே அவர் இயற்பியல் தத்துவங்களை படிக்கவைத்தது. புதிய அறிவியல் கண்டுபிடிப்பிற்கான வேலைகளையும் செய்தார். 1904 ஆம் ஆண்டு புள்ளிவிபரவியல், இயந்திரவியல் சம்பந்தமாக ஒரு ஆய்வுக் கட்டுரையைஎழுதிபத்திரிகையில் வெளியிட்டார். அப்பத்திரிகையில் ஒளியின் மின்வளைவு, சார்புத் தத்துவம் ஆகியவைசிறப்புவாய்ந்தவையாகும். பின்னர் சார்பியல் தத்துவத்தை விபரித்து எழுதினார் இது அவருக்கு உலகப் புகழைத் தேடித்தந்தது.

ஐன்ஸ்டீன் 1903 ஆம் ஆண்டு மிலேவா மரியா என்கிற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவள் அவருடன் பாலிடெக்னிக்கில் படித்தவராவர். 1905 ஆம் ஆண்டு ஐன்ஸ்டீனுக்கு சுவிஸ்லாந்து நாட்டின் குடியுரிமை கிடைத்தது. 1909ஆம் ஆண்டு வரை பதிப்புரிமை அலுவலகத்தில் பணி புரிந்தார். பின்னர் ஜுரிச் பல்கலைக் கழகத்தில் அவருக்கு இயற்பியல் பேராசிரியர் பதவி கிடைத்தது. ஐன்ஸ்டீன் ஆரம்பகாலத்தில் மிகவும் வறுமையில் வாடினார். அவர் சார்பியல் தத்துவத்தை வெளியிட்டு பிரபலம் ஆனதற்கு பிறகும் கூட ஏழ்மையில் வாழ்ந்தார். 1911 ஆம் ஆண்டு அவருக்கு ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி கிடைத்தது. மேலும் 1913ஆம்ஆண்டுபிரஸ்ஸியன் அறிவியல் கழகத்தின் உறுப்பினராகவும் பெர்லினில் உள்ள ஜெய்சர்வில் ஹெய்ம் இயற்பியல்கழகம் இவரைஇயக்குநராக ஏற்றுக் கொண்டது 1933 வரை அப்பதவியில் இருந்தார்.

விஞ்ஞானிகள் பொருளும் ஆற்றலும் தனித்தனியாக உள்ளது என்றும் அதை ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்ற முடியாது என்றும் நம்பிவந்தனர். ஆனால் இவர் தான் முதன் முதலில் பொருளும் ஆற்றலும் (சக்தி) ஒன்றே என்றார். மேலும் பொருளை ஆற்றலாகவும் ஆற்றலைப் பொருளாகவும் மாற்றமுடியும் என்பதைக் கண்டறிந்து கூறினார். இவர் தனது சார்பியல் தத்துவத்தை வெளியிட்ட போது சிலர் மட்டும் இதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அவர் மனம் தளராமல் தொடர்ந்து தன் ஆய்வுக் கட்டுரையின் முடிவை வெளியிட்டும் கொண்டிருந்தார்.

அவருடைய சார்பியல் தத்துவம் இயற்பியலில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியது. எடுத்துக்கொள்ளும்நேரம், இடைவெளி, பொருண்மை, இயக்கம் மற்றும் ஈர்ப்பு ஆகியவற்றை விளக்கியது பொருளிலிருந்து சக்தி கிடைக்கின்றது. அதன் மூலம் தான் சூரியன் கால மெல்லாம் நமக்கு ஒளியைத் தருகின்றது என்றார்.

ஐன்ஸ்டீன் ஆற்றலின் இயல்பைப் பற்றிய ஒரு கணித சமன்பாட்டை கண்டறிந்தார். அது ஒளியின் திசை, வேகம் மற்றும் ஆற்றல் மூன்றையும் இணைக்கும் $E = MC^2$ என்பதாகும் இதன் மூலம் பொருளில் உள்ள ஆற்றலை விளக்க முடியும் என்றார்.

மேலும் ஒளியானது தோன்றிய இடத்தில் இருந்து அசையாமல் இருந்தாலும் இயக்கத்தில் இருந்தாலும் அதன் வேகம் மாறுவதில்லை. அது செக்கனுக்கு 186,000 கி.மீற்றருக்குச் சமம் அதேபோல் வெற்றிடத்திலும் அதே வேகத்தில் பயணம் செய்யும் என்பதை முடிவு செய்தார். ஆகவே ஒளியின் வேகத்தை C எனக் குறிப்பிட்டார். E என்பது ஆற்றல் M என்பது பொருண்மை ஒரு பொருளின் நிறை என்பது அதன் [illegible] திறனின் [illegible] ஒரு கிராம் பொருண்மையானது 250,00 000 கிலோ வாட்மணி அளவு கொண்டது. இது 100 வாட் (W) மின்சார விளக்கை தொடர்ந்து 28,500 ஆண்டுகள் எரியவைக்கும் சக்தி கொண்டதாகும். இது பொருளில் எவ்வளவு ஆற்றல் உள்ளது என்பதை விளக்குகிறது.

பொது சார்புக் கொள்கை மூலம் ஒரு புதிய கோட்பாட்டை விளக்கினார். விண்வெளியின் ஒருவளைவு காரணமாகவே ஈர்ப்பாற்றல் விளைவுகள் உண்டாகிறது. என்பது இவரின் கோட்பாடு ஆகும். இது மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது இதை 1919 இல் ஏற்பட்ட சூரியகிரகணத்தின் போது நிரூபித்தார். அவர் ஒளியைப் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டார். ஆரம்பத்தில் ஒளியானது ஈத்தர் எனும் ஊடகத்தில் வழியாகச் செல்கிறது என நம்பப்பட்டு வந்தது. இவர் ஈத்தர் எனும் ஊடகம் கிடையாது என்பதை நிரூபித்தார். மேலும் ஒளியானது அலையாகவும், நுகர்வாகவும் உள்ளது என்றார். ஒளி ஆற்றலானது ஃபோட்டான் எனப்படும் ஒளித்துகள்களால் ஆனது என்பதை கண்டறிந்தார்.

ஒளியின் மின் விளைவு பற்றிக் கண்டுபிடித்தார். இது இயற்பியலின் முன்னேற்றத்திற்கு உதவியது இதற்காக 1921 ஆம் ஆண்டு நோபல் பரிசு கிடைத்தது. ஐன்ஸ்டீன் இயல்பாகவே நகைச் சுவைமிக்கவர் ஒரு கூட்டத்தில் அவரிடம் சார்பியல் தத்துவம் பற்றிக் கேட்டனர். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். ஒருவன் ஒரு அழகான பெண்ணின் அருகில் மணிக்கணக்கில் உட்கார்ந்து இருப்பது அவனுக்கு ஒரு நிமிடம் போல் இருக்கும் ஆனால் அவனே ஒரு சூடான அடுப்பு மீது ஒரு நிமிடம் உட்காருவது மணிக் கணக்கில் உட்கார்ந்துஇருப்பதுபோல் தோன்றும். இது தான் சார்பியல் தத்துவம் என்றார்.

1930 ஆம் ஆண்டுகளில் ஜேர்மனியில் நாசிசம் தலை தூக்க ஆரம்பித்தது சர்வாதிகாரி ஹிட்லர் 1932 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தார். நாசிசம் இவருக்கு பெரும் துன்பத்தை கொடுத்தது. 1933 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்குச் சென்று அவருக்கு பரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி கொடுத்தனர் அதை ஏற்றுக் கொண்டு அங்கு குடியேறினார்.

ஐன்ஸ்டீன் யூதர் என்ற காரணத்தினால் அவரை அவமானப்படுத்தி




னார் ஹிட்லர். ஜேர்மன் குடியுரிமையையும் இரத்துச் செய்தார். ஐன்ஸ்டீனைப் பிடித்துத் தருவதற்கு 20, ஆயிரம் பொலர் தருவதாக ஹிட்லர் அறிவித்தான் இதனை ஐன்ஸ்டீன் சாதாரணமாக எடுத்துக்கொண்டு எனது தலைக்கு இவ்வளவு மதிப்பு இருக்கின்றது என்பதை நான் அறிந்து கொண்டேன் என நகைச்சுவை படச் சொன்னார். ஐன்ஸ்டீன் ஆகஸ்ட் 2, 1939ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசு தலைவர் ரூஸ்வெல்டுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அணு குண்டுதயாரிப்பதற்கான வாய்புகள் பற்றி எழுதியிருந்தார். இது சம்பந்தமான ஆய்வுகள் செய்ய பொருள் உதவி வழங்கவேண்டும் எனவும் ஜேர்மனியில் நாசிச அரசு அணு குண்டுதயாரிக்கும்வேலையில் இறங்கியுள்ளது. அவர்கள் தயாரிக்க முன்பு நாம் தயாரிக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதுதான் அணு குண்டு தயாரிக்கும் மன்ஹாட்டன் திட்டத்தை அமெரிக்கா தொடங்குவதற்கு காரண மாக இருந்தது. 1940 ஆம் ஆண்டு அமெரிக்கா வின் குடிமகன் உரிமை கிடைத்தது. அவர் தன்னுடைய சமன்பாடான $E = MC^2$ என்கிற சமன்பாட்டை கொண்டு அனு குண்டை தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பல மில்லியன் டொலர் செலவு செய்து 1945 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அணுகுண்டு மெக்சிக் கோவில் பரிசோதிக்கப்பட்டது.

இவ் அணுகுண்டுகள் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6, 9 ஆம் திகதிகளில் யப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்கள் மீது வீசப்பட்டு மனித குலத்திற்கு பேரழிவை உண்டாக்கியது. இதனைக் கண்டு மனம்வருந்திஅணுவைஆக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும் அழிவிற்கு பயன்படுத்தக் கூடாது என கூறினார்.

அவர் உடையணிவதில் கவனம் செலுத்துவதில்லை மிகவும் எளிமையாகவே இருந்தார். அதேபோல் பணத்திற்கும் ஆசைப்படாதவராக இருந்தார். உலகில் உள்ள பத்திரிகையாளர்களும் புத்தக வெளியீட்டாளர்களும் இவருடைய சுயசரிதையை எழுதுவதற்காக பெரிய தொகையை கொடுக்க முன்வந்தனர். அதற்கு அவர் சம்மதிக்காமல் இறுதியாக தானாகவே தன் சுயசரிதையை எழுதினார். பணத்திற்கு என்றில்லாமல் தான் எவ்வளவு கஷ்டப்பட்டு விடா முயற்சியால் முன்னேற்றம் அடைந்தார் என் பதற்காகவும் மற்றவர்களுக்கும் அது பயன்படவேண்டும் என்பதற்காகவ்வுமே எழுதினார். ஒரு பணக்கார தொழில் அதிபர் 30, ஆயிரம் பொலர் மதிப்புள்ள ஒரு வயலினை அனுப்பி வைத்தார். ஆனால் அதை உடனேதிருப்பிஅனுப்பிவைத் தார். இவ்வளவு விலை மதிப்புள்ள இசைக் கருவியை ஒரு திறமைமிக்க உண்மையான கலைஞன் தான் பயன் படுத்த வேண்டும்எனவேதன்னை மன்னித்து விடுங்கள் என்னுடைய பழைய வயலினே போது மானது என்றார்.


ஐன்ஸ்டீன் மிகுந்த தன்னடக்கமும் எளிமையும் மிக்கவர். ஒரு நாள் அவர் தெரு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் தலைமுடி காற்றில் நாலா புறமும் பறந்து கொண்டிருந்தது. அவரின் பின்னால் வந்த ஒருவர் சொன்னார் நீங்கள் வரும் போது யாரும் உங்களைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் காலை மரிலின் மன்றோ வந்தபொழுது அவரை ஆயிரக்கணக்கான மக்கள் சுற்றிநின்று பார்த்தனர் என்றார். உடனே ஐன்ஸ்டீன் சிரித்துக் கொண்டு நகைச்சுவையாகக்கூறினார். நண்பரே, நீங்கள் ஒன்றை மறந்து விட்டீர் கள் அவர் என்னைவிட அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப்பார் என்றார்.

ஐன்ஸ்டீன் போருக்கு எதிராகக்குரல் கொடுத்தார். ஆயுத பரவலுக்கு விஞ்ஞானிகள் ஒரு போதும் துணை போகக் கூடாது என்றார். ஆயுத பெருக்கம் ஏற்படாமல் தடுப்பதே தனது கடமை என்பதை விஞ்ஞானிகள் உணர வேண்டும் என்றார். அறிவியலை ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மனித குலத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதே விஞ்ஞானிகள் கடமை என்பதை வலியுறுத்தினார். 1952 ஆம் ஆண்டு இஸ்ரேல் நாட்டு ஜனாதிபதியாக பதவி ஏற்கும் படி வந்த அழைப்பை நிராகரித்தார் தனக்கு பதவி ஆசை கிடையாது அரசியலும் வேண் டாம் என்றார். தன்னடக்கம் மிக்க பல சிறந்த குணங்களைக் கொண்ட எளிமை மிக்க இக்கணித மேதை 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதி காலமானார்.

குமாரசாமி
யோகன்ராஜ்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் உடல்மொழி ஆய்வு; தலைவர்களுக்கான அச்சுறுத்தலா?



வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரச படையினர்மீது அண்மையில் சுமத்தியுள்ள முக்கியமான குற்றச்சாட்டு தனது உடல்மொழியை இராணுவம் ஆய்வு செய்து வருகிறது என்பதாகும்.

தான் பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு வரும் இராணுவப் புலனாய்வாளர்கள் பல்வேறு கோணங்களில் தன்னைப் படம் பிடிப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவரிடமும் அவர் இதுபற்றி எடுத்துக் கூறியிருந்தார்.

அதற்கு அவர் தன்னையும் இராணுவப் புலனாய்வாளர்கள் பின்தொடர்வதாகவும் அதனை தான் நேரில் கண்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இஸ்ரேலிய பாணியில் தனது உடல் மொழியைப் படம் பிடிக்கும், இராணுவத்தின் செயல் தனது உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணும் நோக்கம் கொண்டதாக இல்லாவிட்டாலும் அது தனக்கு ஒரு மறைமுகமான அச்சுறுத்தல் என்பதுபோல விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அதன்பின்னர் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாட்டில் உரையாற்றிய போதும் வடக்கு மாகாண முதலமைச்சர் இந்த விவகாரத்தை சுட்டிக் காட்டியிருந்தார்.

வடக்கில் இராணுவம் சும்மா புல்லைத் தின்று கொண்டிருக்கவில்லை என்றும் இங்குள்ள அனைவரினதும் விபரங்களையும் கணினிமயப்படுத்தி விபரம் சேகரிப்பதாகவும் முக்கியமான பிரமுகர்களின் உடல்மொழியை ஆய்வு செய்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இன்று உடல்மொழி ஆய்வு என்பது மிக முக்கியமான விடயமாக மாறியிருக்கிறது.

நடை, உடை, பாவனை என்று தமிழில் கூறும் வழக்கம் ஒன்று உள்ளது.

அதுதான், இந்த உடல் மொழி அசைவின் அடிப்படை இந்த மூன்றும் ஒருவரின் குணவியல்புகளையும் செயற்பாடுகள், எண்ணப்பாடுகளையும் குறிப்புணர்த்தக்கூடியவை.

ஒருவரின் இந்த மூன்று விடயங்களையும் தொடர்ச்சியாக ஆய்வுக்குட்படுத்தும் போது அவரைத் துல்லியமாகக் கணிக்க முடியும்.

உலகத் தலைவர்களின் உடல்மொழியைக் கொண்டு அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறானதாக இருக்கும் என்று கணிக்கும் முயற்சிகள் இப்போது தீவிரமடைந்துள்ளன.

அவ்வாறுதான் வடக்கு மாகாண முதலமைச்சரின் உடல்மொழியை கண்காணிக்கு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது.

அரசியலில் இராணுவத்தில் மட்டுமன்றி விளையாட்டிலும்கூட உடல்மொழி என்பது முக்கியமானதாக கருதப்படும்.

குறிப்பாக கிரிக்கெட் போட்டிகளில் தனது அணி வீரர்களை ஊக்குவிக்கும் உடல்மொழியை வெளிப்படுத்துவதற்கு இப்போது அணித் தலைவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

வெற்றிக்கு அது முக்கியமானதாக மாறி வருகிறது. அதுபோலவே அரசியலிலும் இராணுவத்திலும்கூட உடல் மொழி ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

ஏனென்றால் வெளியில் தனது செயல்களின் மூலம் மிகப் பலமான மனிதராக உருவகப்படுத்தப்பட்டவர்கள், உள்ளுக்குள் பலவீனமானவர்கள் என்பதை உடல்மொழி அசைவுகள் பல சந்தர்ப்பங்களில் காட்டிக்கொடுத்திருக்கின்றன.

அதுமட்டுமன்றி ஒருவரின் உடல்மொழியைக் கொண்ட அவர் என்ன நினைக்கிறார். என்ன செய்யப்போகிறார். அடுத்து என்ன முடிபை எடுப்பார் என்பதையெல்லாம் கணிக்கின்ற அளவுக்கு இதுபற்றிய ஆய்வுகள் வளர்ந்திருக்கின்றன.

இஸ்ரேல்தான் இந்த உடல் மொழி ஆய்வில் ஆரம்பத்திலிருந்தே ஈடுபாடு காட்டி வந்தது.

இஸ்ரேலுக்குச் சவாலாக இருந்த பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் மற்றும் அரபு நாடுகளின் தலைவர்களின் செயற்பாடுகள் குறித்து உடல் மொழி ஆய்வுமூலம் இந்த நாட்டின் உளவுப் பிரிவான மொசாட் கணிப்பீடுகளைச் செய்து வந்தது.

அரபுநாடுகள் சூழவிருக்கும் சின்னச்சிறிய இஸ்ரேலின் பாதுகாப்புக்கு எல்லா வகையான பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டிய தேவை அந்த நாட்டுக்கு இருந்தது.

அதற்காக உடல்மொழி ஆய்வையும் தமது பாதுகாப்பு புலனாய்வு அம்சங்களின் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டது இஸ்ரேல்.

அமெரிக்கா இப்போது தனது பாதுகாப்பு திட்டத்தில் உடல்மொழி ஆய்வுக்கான தனி அலகு ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதுபற்றிய தகவல் கடந்த மார்ச் மாதமே அதிகாரபூர்வமாக வெளியே அறிவிக்கப்பட்டது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உள்ளிட்ட உலகத் தலைவர்களின் உடல்மொழியை ஆய்வு செய்வதற்காக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகமான பென்டகனில், Body Leads என்ற பெயரில் தனியான ஆய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யு.எஸ்.ஏ.ருடே இதழில் ராய் லொக்கர் என்பவரே புடின் உள்ளிட்ட உலகத் தலைவர்களின் உடல் அசைவுகளை அமெரிக்கா ஆய்வு செய்கிறது என்ற தகவலை முதன்முதலாக அம்பலப்படுத்தினார்.

அதன் பின்னர் பென்டகனின் ஊடகச் செயலர் றியல் அட்மிரல் ஜோன் கிர்பி அதனை உறுதிப்படுத்தினார்.

ரஷ்ய அதிபராக மீண்டும் பொறுப்பேற்ற விளாடிமிர் புடினின் செயற்பாடுகள் அமெரிக்காவுக்கு பல சமயங்களில் கடும் எரிச்சலைக் கொடுப்பதாக இருக்கிறது.

குறிப்பாக உக்ரேன் விவகாரத்திலும் புடினின் முடிபுகள் அமெரிக்காவுக்கு ஆத்திரமூட்டக்கூடிய வகையில் உள்ளன.

இந்தச் சூழலில்தான் புடினின் உடல் அசைவுகள் ஆய்வு செய்யப்படும் விபரம் வெளியே கசியவிடப்பட்டது.

ஒருவகையில் இது புடினுக்கு விடுக்கப்பட்ட மறைமுகமான அச்சுறுத்தல் என்பதுடன் இன்னொரு வகையில் புடினைக் கண்காணிக்கிறோம். அவரது அடுத்தகட்ட நகர்வுகள் என்னவென்று கண்டறிந்து விடுவோம் என்று அமெரிக்கர்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியதாகவும் இந்தச் செய்தி அமைந்திருந்தது.

நிக்ஸனின் நிர்வாகத்தின் போது இந்த ஆய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டது. அப்போது அதற்குத் தலைமை வகித்தவர் அன்றூ மார்ஷல்.

இப்போது Body Leads ஆய்வு அலகின் பணிப்பாளராக பிரென்டா கேனர்ஸ் என்ற கடற்படை போர்க்கல்லூரியின் ஆய்வாளராக இருக்கிறார்.

முன்னதாக இந்த ஆய்வுப் பிரிவு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்தது.

2003 ஆம் ஆண்டுதான் இது பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த திட்டத்திற்காக அமெரிக்கா ஆண்டுதோறும் 3 லட்சம் டொலர்களை செலவிட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, இஸ்ரேல் பாணியில்தான் இலங்கை இராணுவப் புலனாய்வாளர்களும் தமது உடல்மொழியை ஆய்வு செய்து வருவதாக குறிப்பிட்டிருக்கிறார் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

விடுதலைப் புலிகளும் இந்த உடல்மொழி விவகாரத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டனர் என்பது முக்கியமானது.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடல்மொழி அசைவைக் கொண்டு அவரது குணவியல்புகளை மதிப்பிட முடியாத வகையில் ஒளிப்படங்கள் வெளியிடப்படுவதே வழக்கம்.

இயல்பில் அவர் ஒரு மென்மையான கூச்ச சுபாவமுள்ள உரத்துப் பேசாத மனிதர் என்று அவரை நேரில் செவ்வி கண்ட அனிதா பிரதாப் போன்றவர்கள் கூறியுள்ளனர்.

ஆனால், விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட அவரது ஒளிப்படங்கள் அத்தகைய தோற்றத்தை ஒரு போதும் பிரதிபலிப்பதாக இருப்பதில்லை.

ஆனாலும் அதையும் மீறி ஒளிப்படங்களை வைத்து பிரபாகரனின் நகர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறன் தமிழ் மக்களுக்கு இருந்தது என்பதை மறுக்க முடியாது.

யாழ்ப்பாணத்தை இழந்து வன்னியில் நிலைகொண்டு, பின்னர் மீசையை மழித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், 2004 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோது மீண்டும் மீசையை வளர்க்கத் தொடங்கினார்..

மீசையுடன் அவரது படங்கள் வெளியான போது பிரபாகரன் போருக்குத் தயாராகி விட்டார் என்று பரவராகவே பேசப்பட்டது.

அதாவது பிரபாகரனின் மீசை போருக்கான சமிக்ஞையாக அடையாளம் காணப்பட்டது. அது ஒருவகையில் உண்மையும்கூட.

விடுதலைப்புலிகள் 2004 ஆம் ஆண்டு இறுதியிலேயே போருக்குத் தயாராகியிருந்தனர்.

ஆனால், சுனாமிதான் அதனைத் தடுத்திருந்தது. பிரபாகரனின் மரணத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட படங்களில் அவர் எத்தகைய இறுக்கமான சூழ்நிலைக்குள் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தியிருந்தன.

கொழும்பில் விமானம் மூலம் தாக்குதல் நடத்திய கரும்புலிகளுடன் எடுத்துக் கொண்ட படங்களில் அவரது இறுக்கமான தோற்றம் வெளிப்பட்டது.

முன்னர் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் தளபதிகளின் உடல்மொழியை ஆய்வு செய்துவந்த இராணுவப் புலனாய்வுத்துறை இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இது அவர்களின் எதிர்காலத் திட்டங்களைக் கணிப்பதற்கு அவர்களுக்கு உதவக் கூடும்.

அதேவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அரசியல் பிரமுகர்கள், இந்த விவகாரத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியம் என்பதையே முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரை எடுத்துக்காட்டியிருக்கிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியை நிலைநாட்ட வேண்டும்

## மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலை குறித்து பிரான்ஸ்



(கொழும்பு)

மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலை சம்பவ விசாரணைகள் குறித்து தொடர்ந்தும் உன்னிப்பாக கவனம் செலுத்தப்படும் என பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஏசீஎப் என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியளிப்பதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என குறிப்பிட்டுள்ளது.

நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே பிரதான நோக்கம் என தெரிவித்துள்ளது.

குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கான சகல வழிகளும் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

தன்னார்வ தொண்டர்களை படுகொலை செய்த நபர்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கிலேயே விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேரில் கண்ட சாட்சியாளர்களின் சாட்சி முக்கியமானது என சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் வாழ்ந்து வருவோர் மற்றும் இலங்கையில் உள்ளவர்கள் சாட்சியமளிக்க முன்வர வேண்டுமெனவும், இதற்கு பிரான்ஸ் தூதரகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமா இல்லையா என்பதற்கு பிரான்ஸ் தூதரகம் திட்டவட்டமான பதில் எதனையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மக்களினது பிரச்சினைகளையே யோசனையாக முன்வைத்தோம்

## அமைச்சர் விமல் விளக்கம்

தமது கட்சியின் 12 யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் வரை தாம் அரசாங்கத்துடன் முரண்பாட்டை தொடரப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் பிரசாரம் ஒன்றில் உரையாற்றிய அவர், தமது கட்சியின் 12 யோசனைகளும் அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச்செல்வதற்கான யோசனைகளாகும்.

இந்த யோசனைகள் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.



இந்தநிலையில் தமது கட்சி மாத்திரமே அரசாங்கத்துக்குள் உள்ள பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் கட்சியாகவுள்ளது. அதாவது மக்களுக்காகவே இந்த பிரச்சினைகள் நாம் எடுத்துக் கூறுகின்றோம் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

இதேவேளை தமது கட்சியின் யோசனைகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் கொள்கைகளில் உள்ளடக்கப்படும் என்று நம்புவதாக அமைச்சர் விமல் மேலும் தெரிவித்தார். (இ)

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பா.ஜ.கட்சி நடவடிக்கை எடுத்துவருகின்றது

(கொழும்பு)

தமிழக மீனவர் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண்பதற்காக பா.ஜ.க தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தூத்துக்குடியில் அவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தூத்துக்குடியில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட முதல்வர் ஜெயலலிதா, மாநகராட்சித் தேர்தலில் தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும், பா.ஜ.கவுக்கு மத்தியில் ஒரு நிலைப்பாடு, மாநிலத்தில் ஒரு நிலைப்பாடு என்றும் பேசியுள்ளார்.

இது முற்றிலும் தவறான கருத்து. தமிழக மீனவர் பிரச்சினை



யில் அவர் கடிதம் எழுதிவிட்டு அமைதியாக இருந்துவிடுகிறார்.

ஆனால், நாங்கள் பா.ஜ.க. மாநிலப் பொதுச்செயலர் சரவணப் பெருமாள் தலைமையில் ஒரு குழு அமைத்து, மீனவர்களிடம் கருத்துகளைப் பெற்று, அந்த அறிக்கையை வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் அளித்துள்ளோம்.

அறிக்கையைப் பெற்றுக்கொண்ட அவர், தமிழக மீனவர் பிரச்சினையை நன்கு உணர்ந்திருப்பதாகவும், இதுகுறித்து உறுதியான நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

மீனவர்கள் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண பா.ஜ.க. தொடர்ந்து போராடி வருகிறது. மீனவர் பிரச்சினை தொடர்பாக சுப்பிரமணியன் சுவாமி கருத்து தெரிவித்த சில மணி நேரத்தில் அவரது கருத்து பா.ஜ.கவின் கருத்து அல்ல எனத் தெரிவித்தேன்.

பா.ஜ.க. மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற அர்த்தத்தில் முதல்வர் பேசி வருகிறார் என தமிழிசை சௌந்தரராஜன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## பந்த பாசம்

போதி வனம் அமைதியாக இருந்தது. காற்று இலேசாக வீசிக் கொண்டிருந்தது.

இலைகள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன.போதி சத்துவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவரைச் சந்திப்பதற்காக ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் காத்துக் கொண்டிருந்தார். சிறது நேரத்தில் அவர் மெதுவாக கண்ணைத் திறந்தார்.

இவன் உடனே அவரது காலில் விழுந்து வணங்கினான்.

"உனது பெயர் என்னப்பா? "என்று கேட்டார்.

" அபி நந்தன் "என்றான் அவன்.

"உனக்கு என்ன வேண்டும் "என்று கேட்டார்.

"தேவா நான் ஒரு ஏழை எனக்கு மனைவியும் மூன்று பிள்ளைகளும் உள்ளனர்.பந்த பாசங்களில் மாட்டிக் கொண்டு நான் சித்திரவதைகளை அனுபவித்துவிட்டேன்.அதுதான் உங்களிடம் வந்தேன்.நீங்கள் தான் என்னைத் துறவியாக்க வேண்டும். ஞானமார்க்கத்தை காட்ட வேண்டும்"என்றான்.

போதி சத்துவர் சிறிது நேரம் யோசித்தார். பின்னர் அபிநந்தா இந்த மரங்களிலுள்ள இலைகளெல்லாம் ஏன் அசைகிறது தெரியுமா? காற்று வந்து மோதும் போது இப்படி ஆகிறது.

அது போல தான் பாசம் என்னும் காற்று வந்து மோதும் போது மனித இலைகள் இப்படித்தான் ஆடும். முதலில் உன்னுடைய மனதிலிருக்கும் பாசத்தை அறவே விட்டுவிடவேண்டும். அது உன்னால் முடியுமா? என்று கேட்டார்.

"முடியும் "என்றான் அவன்.

" சரி அப்படியானால் நீ இன்றிலிருந்து இந்த போதி வனத்திலேயே தங்கலாம் என்று சொல்லிவிட்டார் போதி சத்துவர்.

அபி நந்தன் அங்கேயே தங்கினான்.சிறிது நாட்களில் அபிநந்தனுடன் ஒரு நாய்க்குட்டி வந்து ஒட்டிக் கொண்டது.போதி சத்துவர் பார்த்தார்.

"என்னப்பா இது? "என்றார்.

" பிரபு இந்த நாய் எப்பொழுதும் என்னை விட்டுப் பிரிந்ததில்லை. இதை மட்டும் வைத்திருப்பதற்கு அனுமதி கொடுங்கள்" என்றான்.

போதி சத்துவர் சிரித்து க்கொண்டே போய்விட்டார்.

சிறிது நாட்கள் கழிந்து அந்த நாய்க்குட்டிக்குப் பக்கத்தில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான்.

"அபிநந்தா யார் இந்த சின்னப்பையன்?" என்று கேட்டார் இவர்.

" பிரபு இவன் என்மகன் இந்த நாயைப் பிரிந்து இவனால் இருக்க முடியவில்லை.அதனால் இவனை மட்டும்..." என்று இழுத்தான். போதி சத்துவர் இப்பொழுதும் சிரித்துக் கொண்டே போய் விட்டார்.

சிறிது நாட்களில் ஒரு பெண் வந்து சேர்ந்தாள்.

"அபிநந்தா யார் இவள்?" என்று கேட்டார்.

"தேவா இவள் எனது மனைவி மகனை விட்டுட்டு ஒரு விநாடியும் இருக்க முடியவில்லை.அதனால் தான் இவளையும்..." என்று இழுத்தான்.

போதி சத்துவர் சிரித்தார்.

2 பாத்திரங்களை எடுத்தார். ஒன்றில் நிறைய பண்டங்கள் இருந்தன. இன்னொரு பாத்திரம் காலியாக இருந்தது.

பண்டங்கள் இருந்த பாத்திரத்தை தண்ணீரில் விட்டார்.அது அப்படியே மூழ்கி அடியில் போய்விட்டது.காலி பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது மிதந்து கொண்டிருந்தது.போதி சத்துவர் சொன்னார்.

கனமான பாத்திரம் அமிழ்ந்து விட்டது. காலியான பாத்திரம் மிதக்கிறது. காலிப் பாத்திரம் இருக்கிறதல்லவா அது ஞானப் பாத்திரம். கனமான பாத்திரம் என்பது பாசப் பாத்திரம்.

அபி நந்தா உதிர்ந்து போக விரும்பும் உரோமங்கள் உதிர்ந்து விடுகிறது. உதிர விரும்பாத உரோமங்கள் நரைத்து விடுகிறது. உதிர்ந்த முடி ஓடிப்போய் விடுகிறது. உதிராத தலைமுடி இருந்து கொண்டே கேலி பண்ணுகிறது. விலக்க முடியாத பந்தங்களும் அப்படிப்பட்டது தான் உன்னுடைய இதயம் பாசத்திற்காகவே படைக்கப்பட்டது.சித்திரவதை என்பது நீ அதற்கு கொடுத்தே தீர வேண்டிய விலை போய்வா என்றார்.

அதனால் நான் துறவியாகப் போகிறேன். ஞானியாகப் போகின்றேன் என்பதெல்லாம் சொல்வது சுலபம் ஆனால் செயற்படுத்துவது மிகவும் கஷ்டம்.

ஆசையை விட்டு விடுவதற்கு மனிதன் பழகிக் கொள்ள வேண்டும். அதற்காகத் தான் சில புண்ணிய நதிகளில் போய் மூழ்கி நமக்கு பிடித்தமான எதையாவது விட்டுட்டு வரவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.நம்மைப் போல ஒருத்தர் அந்த இடத்துக்குப் போனார் புண்ணிய நதிகளில் மூழ்கி நிஜமாகவே சில ஆசைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும் என்ற நோக்கில் தான் போனார். மூக்கை பிடித்துக்கொண்டு மூழ்கி எழுந்தார். வெறும் கையுடன் வெளியில் வந்தார் பக்கத்திலிருந்த நண்பர் "இப்ப எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"மனம் நிறைந்து விட்டது.இனிமேல் அடிக்கடி வந்து இப்படி முழுக்குப் போடலாம் என்று தோன்றுகிறது" என்றார்.இவர்.

"ஏன் ?"என்று கேட்டார் நண்பர்.

"நான் தண்ணீரில் மூழ்கும் வரை எதையாவது விட்டு விடலாம் என்ற ஆசையில் தான் போனேன். ஆனால் தண்ணிக்கு அடியில் போய்ப் பார்த்தால் ஏற்கனவே யாரோ வீசியெறிந்த தங்க காப்பு ஒன்று கையில் தட்டுப்பட்டது. உடனே என் முடிவை மாற்றிக் கொண்டேன். சம்சாரத்துக்கு உதவுமே என்று சொல்லி அதை எடுத்து மடியில் செருகிக் கொண்டு வந்துவிட்டேன்". என்றார்.

இவருடைய மனைவி மிகவும் கொடுத்து வைத்தவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையில் பரஸ்பர ஒத்திசைவே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகும்

**தற்போதைய நிலையில் பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வொன்றினை பெறுவதென்ற இந்தியாவின் தேவை இலங்கையை அதன் இக்கட்டிலிருந்து விடுபட உதவும் நோக்கிலேயாகும். விசாரணைக்கான விடயங்கள் பற்றிய உண்மைகளை ஐ.நா.ம.உ.ச இவ்வளவுதான் கண்டுபிடிக்கக்கூடியதாயிருக்குமென இலங்கை ஆரம்பத்திலேயே குறைத்து மதிப்பிட்டிருந்ததிலும் பார்க்க நிலைமை எவ்வளவோ பாரதூரமானதாக மாறியிருப்பதாய் உருவான நெருக்கடியிலிருந்து அதனை இப்போது விடுவிக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு.**





இந்தியா இவ்விதம் செயற் பட்டதன்மூலம் நான்காம் ஈழப் போரின் போதும் அதற்குப் பிற்பாடும் சர்வதேச சமூகத்தின் வேறு சில அங்கத்தவர்கள் மேற்கொ ண்டிருந்தது போன்ற ஒரு பக்கக் குற்றச்சாட்டு என்றவிதமாக இல்லாது மற்றுமொரு வழியைக் கையாண்டது.

**த.தே.கூட்டமைப்பையும் இறைமையுள்ள அரசின் நிலையையும் வெவ்வேறாக நோக்கும் விதத்தில்**

இவ்விதம் செயற்படுவதன் மூலம் இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் நம்பகத்தன்மை போன்ற விடயங்களிலான ஐ.நா.ம.உ.சபை விசாரணையை சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் கூடுதல் முனைப்பான இராஜதந்திர விடயங்களிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ்மக்களையும் இந்தியா விலக்கி வைத்திருப்பதாகவே தெரிகிறது. கடந்த காலத்திலும் வருடங்களாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தவித இராஜதந்திர விடயங்களில் சம்பந்தப்படவிடாமல் பார்த்துக்கொண்டதுடன் அதுமட்டிலான ஆலோசனைகளையுங்கூட முடிந்தவரையில் அரச மட்டங்களிலேயே இந்தியா நடத்தியு மிருந்தது. ஐ.நா.ம.உ.ச. விசாரணை மட்டில் இலங்கையின் இறைமை அடிப்படையிலான நிலைப்பாட்டில் இருந்திருக்காவிடில் இந்தியாவால் தற்போது முடிந்தளவிற்குநகர்வினைமேற்கொண்டிருக்க இயலாது போயிருக்கும். அல்லாவிடில் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

மோடியுடையநிர்வாகத்திற்குஇந்தவித விருப்பத்திற்குரிய தெரிவை நினைத்துப்பார்க்கவும் முடிந்திருக்காது போலவே தெரிகிறது. இதில் மனதிற்கொள்ளவேண்டிய உண்மையென்னவென்றால் 2013 மார்ச் மாத ஐ.நா.ம.உ.ச. தீர்மானத்திற்கான அந்த உச்சக்கட்ட நிலையிலுங்கூட அப்போது லோக்சபாவில் பி.ஜே.பியை தலைமை தாங்கி வழிநடத்தியவரும் எதிர்க்கட்சித்தலைவராகவுமிருந்த சுஷ்மா சுவராஜ் ஐ.நா. தீர்மானம் சம்பந்தமாக இந்திய பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் விதத்தில் கூடுவதற்கும் அனுமதிப்பதில்லை என்ற உறுதியான தீர்மானத்திலேயே இருந்தார். தமிழர்கள் அல்லாத ஏனைய பிராந்திய கட்சிகளும் அப்போது மத்தியிலிருந்த ஆளுங்கூட்டணிக் காங்கிரஸின் கருத்தையே கையாள்வதென தீர்மா னித்திருந்தன. அப்போது அடுத்து ஆட்சிக்கு வருமென எதிர்பார்க்கப்பட்ட பி.ஜே.பிக்கும் இதுவே முடிவானதாயிருந்தது.

அயல் நாடொன்றின் இறைமை சம்பந்தப்பட்ட விடயங்களில் இந்தியா தலையீடு செய்வதையோ அல்லது அவ்விதமாக நடந்து கொள்வதையோ அவர்கள் விரும்பியிருக்கவில்லை. ஒருவழியில் இது நாட்டின் பெரும்பான்மையினரது பொது இணக்கப்பாடானஒருவிடயம்போன்று அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களது பாராளுமன்ற பிரதிநிதிகள், தென்பிராந்திய தமிழ்நாட்டின் கருத்துக்களையும் இவ்விடய சம்பந்தமாக புறந்தள்ளுவதாகவே இருந்தது. அந்தவிதமான நிலைப்பாடு பின்னர் பெரிதும் மாறியதில்லை.

குறிப்பான அந்த பாராளுமன்ற அமர்வின் போதிலிருந்தே தொடர்ந்து வந்த முந்திய பிந்திய அமர்வுகளிலுங்கூட குறிப்பான அந்த அனைத்துக் கட்சிகளுடன் மேலும் கூடுதலானவை ஒன்றிணைந்து கொண்டன. மோடி– தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சந்திப்பின் பேரில் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவித்தலின்படி இலங்கை தமிழ் சமூகத்திற்கான அரசியல் தீர்வானது ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அவர்களுக்குரிய சமத்துவம், மகத்துவம், நீதி மற்றும் சுய கௌரவம் போன்ற மனித விழுமியங்களை வலியுறுத்தும் அச்சமூகத்தின் வேணவாவை உறுதி செய்வதாய் அமைய வேண்டும் என்றவிதத்தில் உருவான ஒத்த கருத்தையே தீர்வு விடயத்தில் நிலைப்பாடாகக் கொண்டன. மோடி அரசின் கன்னி வரவு செலவு அறிக்கைக்கான பாராளுமன்ற அமர்வு செயற்பாடுகளுங்கூட மேற்படி நிலைப்பாடு மாறாதென்பதையே வெளிப்படுத்துவதாயிருந்தன.

**இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கான உதவி**

தற்போதைய நிலையில் பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வொன்றினை பெறுவதென்ற இந்தியாவின் தேவை இலங்கையை அதன் இக்கட்டிலிருந்து விடுபட உதவும் நோக்கிலேயாகும். விசாரணைக்கான விடயங்கள் பற்றிய உண்மைகளை ஐ.நா.ம.உ.ச இவ்வளவுதான் கண்டுபிடிக்கக்கூடியதாயிருக்குமென இலங்கை ஆரம்பத்திலேயே குறைத்து மதிப்பிட்டிருந்ததிலும் பார்க்க நிலைமை எவ்வளவோ பாரதூரமானதாக மாறியிருப்பதாய் உருவான நெருக்கடியிலிருந்து அதனை இப்போது விடுவிக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு. தீர்வின் பொருட்டு இலங்கை ஏற்கனவே வழங்கியிருந்த அர்த்தமற்ற வெறும் வாக்குறுதிகளுக்கும் மேலாக எதிர்கால விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான முன் முயற்சியை இப்போது இந்தியா தனதாக்கிக் கொண்டது.

இந்த விதத்தில் இலங்கை விடயத்தில் நிச்சயமற்றிருந்த ஏனைய உலகநாடுகளுக்கு இலங்கை சர்வதேசத்திற்கும் தான் வெற்றிகரமாக முன்னெடுத்துவரும் அபிவிருத்தியும் ஜனநாயக செயற்பாடுகளுமே நாட்டின் அதிகாரப் பரவலாக்கத்திற்கான உண்மையான மாற்றீடு என்றில்லாமல் நாட்டின் கருவூலப்பிரச்சினையாக தொடர்ந்துமிருந்து வரும் இனப்பிரச்சினைத் தீர்வில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதான தோற்றப்பாட்டினை காட்டி அவற்றை நம்ப வைக்கவேண்டியுள்ளது. ஐ.நா.ம.உ.ச. பேச்சுக் களில்கலந்து கொண்டிருந்த இந்த ஏனைய நாடுகளுங்கூட அடுத்த வருடம் வருகின்ற மார்ச் ஐ.நா. அமர்வுகளின் போது திடீர் தீர்மானங்களில் இறங்கிவிடாது வாக்களிப்பு விடயங்களை மெதுவாகவும் நிதானத்து டனும் நகர்த்தும்படி இலங்கையின் சமூக அரசியல் தளத்தில் முன்னேற்றகரமான தெளிவான அடையாளங்களை எதிர்பார்ப்பார்கள் என்பதால் அதனையும் சமாளிக்க வேண்டும். இந்திய அரசுக்கும் இது மட்டில் பெரிய அனுபவமில்லாததால் ஐ.நா .ம .உ.ச. தீர்மானம் இலங்கையை சீக்கிரம் பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்வதற்கு தானுங்கூட இலங்கையின் அரசியல் தீர்வுக்கான சரியான பாதையிலே பயணிப்பதாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய இந்த அவசரத் தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. தன் மீதான நம்பகத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு உள்ளூரிலேயே உருவாக்கப்பட்ட இலங்கையின் விசாரணை முடிவுகளுடன் அதற்கு முன்னரே வரவேண்டிய அரசியல் தீர்வுகளுங்கூட பயன்தாக்கமுள்ளவையாக அல்லது அவ்வாறு தோற்றமளிப்பதாகவாவது இருக்கும் என்று நம்பவேண்டிய தேவை இந்தியாவுக்கும் கூட ஒருவேளை இருக்கலாம்.

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினுடைய கடின பிரயாசைகளும் சிரமங்களும்**

இலங்கையரசு அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை விடயரீதியாக பல வழிகள் மூலம் எட்டியதன் பின்னர் அவை முறிவடைந்து பின்னர் மீளவும் ஆரம்பிக்கும்போதோ ஆரம்பிக்குமாயிருந்தாலோ சில விட்டுக் கொடுப்புக்களுடன் பெற்றுக் கொள்ளப் பட்டவையென்ற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரமங்கள் நின்றுபோகாது. கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் வடமாகாண சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் செலுத்தப்படும் அரசியல் செல்வாக்குடன் ஏனைய தமிழர்கள் மற்றும் பேரிடப் பெயர்வைச் சந்தித்த புலம்பெயர் மக்களதும் அரசியல் நடவடிக்கைகளால் தமிழ் தலைமைத் துவமானது தமக்கான கடப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடி யுமென்று நிரூபிக்க வேண்டியளவிற்குஉற்றுக்கொள்ளப் படாத ஒருவித நிஜ நெருக்குதலின் கீழ் இருந்துகொண்டிருக்கிறது எனலாம்.

இனப்பிரச்சினைக்குரிய நிலையான தீர்வைக் கண்டு கொள்வதிலுள்ள பிரச்சினைகளில் ஒன்று என்னவென்றால் கொழும்பில் இருக்கும் இலங்கை அரசானது விசேடமாக சிங்கள–பௌத்ததேசியவாதஅமைப்பு உட்பட நாட்டின் சிங்களவர்களனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதேயாகும். அதேமாதிரி முன்னாட்களில் TULF மற்றும் தற்போதைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற மிதவாத தமிழர் குழுக் களுங்கூட தமிழ்மக்களையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இது அவ்விதமாக இருந்திருக்கவுங்கூடாது.

இலங்கையின் எந்தவொரு அரசாங்கமும் சிங்கள பௌத்த தேசியவாத அமைப்பெதனையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக ஒருபோதுமே உரிமை பாராட்டியதில்லை.

இவ்விதமான ஒரு காலகட்டத்தில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச எவரது எதிர்பார்ப்பிற்கும் அப்பாற்பட்டவிதமாக எதிர் மாறாகச் செயற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க ஓர் சந்தர்ப்பமாகும். அரச சார்பற்றதும் தனித்துவமானதுமான தமிழ் மிதவாத அரசியல்தலைமைத்துவத்தின் விடயத்தில் முதலில் அனைத்து கிளர்ச்சியாளர்களும் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளும் பிரேமதாசவின் பிரபல்யத்தை மாற்றிவிட்டிருந்தனர். இவ்விதம் செயற்படாதவிதத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எச்சரிக்கையாகயிருக்க வேண்டியதாயிற்று. அதாவது நாட்டிலும் நாடுபற்றியதுமான தமிழர் அரசியலில் குறிப்பாக வடபகுதி பற்றிய விடயத்தில் தாமே முழுப்பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர் என உலகத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய தேவை இருப்பதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது இலங்கைத் தமிழருக்கு தாமே முற்று முழுதான பிரதிநிதிகள் என தொடர்ந்தும் நிரூபிக்க விரும்பும் அனைவருக்கும் அது எளிதான விடயமல்ல என்பதையேதளநிலைமை பற்றிய யதார்த்தம் எடுத்துக் காட்டுவதாக தெரிகிறது. இவர்களில் புலம்பெயர் தமிழர்களின் குறிப்பிடத்தக்க தொகையினர் உள்ளடங்கியிருந்தாலுங்கூட இருக்கும் நிலவரம் அதேதான்.

கடந்த நவம்பரில் இறுதியாக நடந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதனை நிரூபித்தாலுங்கூட முற்றுமுழுதான ஒன்றாகக் காட்டுவதற்கு தமிழர் சமூகத்தினிடையே தேவையான அனைத்து விடயங்களிலும் விசேடமாக அரசியல் சார்ந்த விதமாக அதனது வார்த்தைகளுக்கு வேண்டிய மதிப்பு எப்போதும் இருந்து கொண்டுதானிருக்கிறது என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தொடர்ந்தும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

(தொடரும்)

**பரஸ்பர அனுசரிப்பே தொடர்ந்தும் தீர்வுக்கான தாரக மந்திரம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என். சத்தியமூர்த்தி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.**

தமிழில் - **யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்போ கனியோ கவிதைச் சுவையோ?

## திரை இசைப் பாடல்கள் ஒரு பார்வை



க.கணேசலிங்கம்

"தாயெழிற் தமிழை
எந்தன் தமிழரின்
கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற்காண
இப்புவி அவாவிற்
தென்றல் தோயுறும்
மதுவின் ஆறு
தொடர்ந்தெந்தன்
செவ்வியில் வந்து
பாயுநாள் எந்தநாளோ
யாரிதை பகர்வாரிங்கே?"
- பாரதிதாசன்

தமிழ் கவிதைத் துறைக்கு தமிழ்த் திரைப் படப் பாடல்கள் மகத்தான பங்கினைச் செலுத்தியுள்ளது என்பதனை மறுத்து விடமுடியாது.

இந்தத் திரைப் பாடல்களின் எளிமை, இனிமை, ஓசை நயம், இசை நயம் இதமளிப்பதாகவே இருக்கிறது.

சுவையூட்டும் சுவை கூட்டும் இத்திரைப்பாடல்கள் காற்றில் கலந்து மிதந்து வரும் போது கேட்பதற்கு மனதுக்கு மகிழ்வூட்டவே செய்கிறது.

அமுத கானம் பொழிகிறது இந்த தேன் சுவை மேவும் செந் தமிழ் கீதங்கள் மதுரகான இன்பத்தில் மனம் லயித்து திழைக்கிறது.

"கன்னல் மொழி பேசி,
காலமெல்லாம் உறவாடி,
இன்பமெல்லாம்
கண்டிடலாம்..."

"ஆனந்தம்
ஆனந்தம் பாடும்
மனம் ஆசையில்
ஊஞ்சலில் ஆடும்..."

"கானாமிர்தமே
ஆனந்தமே..."

சந்தோஷ ஊஞ்சலில் ஆட வைக்கின்றார்கள் இந்த திரைப் படக் கவிஞர்கள்.

'கவிதைக் கதவுகளைத் திறந்து ஒளிபாய்ச்சுகிறது. வாழ்வின் நுட்பங்களையும் இரகசியத்தையும் அற்புதத்தையும் நம்பிக்கையையும் பரிமளிப்பையும் வழங்குகிறது. மொழியை வளப்படுத்துகிறது.' என கருணாகரன் என்பவர் கவிதை பற்றி கருத்து தெரிவித்திருந்தார்.

"காட்டில் மரமுறங்கும்,
களனியிலே நெல்
உறங்கும் பாட்டில்
யொருளுறங்கும்..."

"துயரங்களைத் தணித்து, மனிதர்களின் எண்ணத்தை உயர்த்துவது தான் கவிதையின் மகத்தான குறிக்கோள்" என்றார் ஆங்கில கவிஞர் கீட்ஸ் (Keats)

"துன்பக்கடலைத்
தாண்டும் போது
தோணியாவது கீதம்,
அன்புக்குரலில்
அமுதம் கலந்தே
அருந்தத் தருவது கீதம்,
எங்கும் சிதறும்
எண்ணங்களையும்
இழுத்து வருவது கீதம்
துயர் இருளை
மறைப்பதும் கீதம் !! ... "

கீட்ஸினுடைய கருத்துக்கு ஒத்த கருத்துடைய தாக அமைந்திருக்கிறது இந்த திரைக். கவிதை.

"கொஞ்சும் சதங்கை
ஒலி கேட்டு நெஞ்சில்
பொங்குதம்மா
புதிய பாட்டு ...!!"

"காலைத் தென்றல்
பாடிவரும் பாடல்
ஒருபாடல் ..."

"தென்றல் பாடும்
தாலாட்டில் நீ
இன்பம் பெற
வில்லையா?..."

"மலை ஓரம் வீசும் காற்று
மனதோடு பாடும் பாட்டு
கேட்குதா? கேட்குதா? ..."

"மெல்ல வரும் காற்று,
சொல்லித்தரும்
பாட்டு ..."

"உள்ளம் கொள்ளை
போகுதே
உண்மை இன்பம்
காணுதே
தெள்ளுதமிழ்
தெம்மாங்கு பாடிடுதே ..."

திரைக்கவிஞர்கள் கவிதை பற்றிய அனுபவங்களை இவ்வாறெல்லாம் பகிர்ந்து பரவசப்படுத்துகின்றார்கள்.

"வண்ண வண்ண
சொல்லெடுத்து
வந்தது செந்தமிழ் பாட்டு,
வாசமுள்ள
மல்லிகைப் பூ மணம்
தந்தது செந்தமிழ்
பாட்டு..."

"ஆயிரம் நிலவே வா
ஓராயிரம் நிலவே வா
இதழோரம் சுவைதேட
புதுப்பாடல் பாட
ஆயிரம் நிலவே வா..."

"பாடும் நிலாவே
தேன் கவிதை,
உன்பாட்டலை
நான் கேட்கிறேன்
பாமாலையில் நான்
கோர்க்கிறேன்..."

"நிலவும் மலரும்
பாடுது,
உன் நினைவில்
தென்றல் வீசுது..."

" அனுபவங்களைக் கலந்து கொடுப்பவன் எழுத்தாளன், அனுபவங்களுக்குள் கரைந்து போகிறவன் கவிஞன் " என்றார் கவிஞர் மு.மேத்தா.

" ஒரு கவிதையை உருவாக்க வாழ்நாள் முழுவதும் கூட காத்திருக்க வேண்டிவரும். கவிதைகள் மனிதன் நினைக்கும் போது உண்டாக்கிக் கொள்ளக் கூடியன அல்ல. அவை அனுபவங்கள். ஒரு கவிதை--யின் பொருட்டு நிறைய மனிதர்களை, நிறைய நகரங்களை, பொருட் களைக் காண வேண்டி யிருக்கும். இப்படி, இப் படியாக ... ஒரு வேளை அப்போது கவிதையின் முதல் வார்த்தை எழுந்து வரக் கூடும். "என்கிறார் ஜேர்மனியக் கவிஞர் ரெய்னர் மரியாரிஸ்கே.

"கொட்டு கொட்டென்ற
கொட்டுது பாரு அங்கே
மழை கொட்டு
கொட்டென்று கொட்டுது
பார் இங்கே ..."

"அந்தி மழை பொழிகிறது
ஒவ்வொரு துளியிலும்
உன்முகம்
தெரிகிறது ..."

"மழை பெஞ்சாத்தானே
மண்வாசம்
உன்னை நினைச்சாலே
பூவாசம்தான்..."

கவிதையில் மழை, கவிதை மழை கொட்டுகிறது. திரைக் கவிஞர்கள் இவ்விதம் கொட்ட வைத்து மகிழவைக்கின்றார்கள்.

"பூப் பூக்கும் மாசம்
தைமாசம்,
ஊரெங்கும்
வீசும் பூவாசம்..."

"பொன் வண்டொன்று
மலரென்று
முகத்தோடு மோத,
நான்வளை கொண்டே
கையாலே
மெதுவாக மூட,
என் கருங்கூந்தல்
கலைந்தோடி
மேகங்களாக,
நான் பயந்தோடி வந்தேன்
உன்னிடம்
உண்மை கூற ..."

இவ்விடம் அவன் தந்த இன்பநிலை கண்டு என்னிடம் நான் கண்டேன் மாறுதலை......"

"ஆயிரம் மலர்களே
மலருங்கள்,
அமுதகீதம் பாடுங்கள்,
பாடுங்கள் ..."

" சில கவிதைகள் என்மீது பூ எறிந்து விட்டுப் போயிருக்கின்றன. " என்றார் கவிஞர் வைரமுத்து.

இந்தக் கவிதைகளும் பூக்களைச் சொரிந்த வண்ணமேயிருக்கின்றன. பூ மழை இங்கு பொழிகிறது, தேன் மலர் தூவும் நேரமிது.

" பூக்களெல்லாம் சிரிப்பைத் தந்தது, நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு ..."

"எத்தனை எத்தனை
இன்பங்கள்
பொங்குதம்மா,
பல்சுவையும்
சொல்லுதம்மா ..."

தமிழ் எத்தனை முறை கேட்டாலும் சலிப்பதில்லையே இனிப்பில்லாத முக்கனியா, இசையில்லாத முத்தமிழா?

"இனிமை என்னும்
மோகனம்
இசைந்து பாடும்
என் மனம் ...
இசை கேட்டு
எழுந்தோடி
வருவாரன்றோ ?..."

இந்தக் கவிதைகளுக்கு ஏற்ற பொருத்தமான இசையை இசைக்க கலைஞர்கள் சேர்த்து " சுகமான ர்ாகங்களே சபை ஏறி வாருங்களே..." என்று சொல்ல வைத்துள்ளார்கள்.



இசை வெள்ளம் நதியாக ஓடும். அதிசய ராகம், ஆனந்த ராகம், அழகியராகம், அபூர்வ ராகம், மனோகரமான ராகங்கள்.

பூபாளம், மோகனம், தோடி, கல்யாணி, சாருமதி, சண்முகப் பிரியா, சரசாங்கி, சஹானா, ஹிந்தோளம், கரகரப்பிரியா, ஸ்ரீரஞ்சனி, தேவமனோஹரி, மலயமாருதம், வசந்தா, நீலாம்பரி, சரஸ்வதி, ஹம்சத்வனி, காம்போதி, பிலஹரி, பைரவி, ஆனந்த பைரவி, சிந்து பைரவி, சாருகேசி, சங்கராபரணம், பந்துவராளி, அடானா, ஆபோஹி, நாட்டைக்குறிஞ்சி, கானடா, ஆரபி, காபி, தர்பார், ஹம்ச நாதம், அம்ருதவர்ஷினி, செருசுருட்டி, இன்னும், இன்னும்...

"ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?.."

"இசை மழை எங்கும்
பொழிகிறது,
தென்றலின் ஜீவன்
நனைகிறது,
கடலலையாவும்
இசை மகள் மீட்டும்
அழகிய வீணை
ஸ்வர ஸ்தானம்,
இரவும் பகலும்
ரசித்திருப்போம் ..."

"ஆம் ரசித்திருப்போம்
இனிமை நினைவுகள்
தொடரட்டுமே ..."

# காஷ்மீரில் மீட்பு படகை கடத்தி செல்லவில்லை

மழையால் பாதிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பாதிக்கப்பட்டவர்களை மீட்க முப்படையினரும், பேரிடர் மீட்புக்குழுவினரும் போராடி வருகின்றனர்.


இந்நிலையில், கடந்த 13ஆம் திகதி மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்திற்கு, ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி கட்சி தலைவரான யாசின் மாலிக் தனது ஆதரவாளர்களுடன் சென்று இடையூறு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. மேலும், நிவாரணப் பொருட்களை தனிப்பட்ட முறையில் வழங்குவதற்காக மீட்பு படகை கடத்திச் சென்றதாகவும் கூறப்பட்டது. ஆனால், தன் மீதான குற்றச் சாட்டுகளை யாசின் மாலிக் மறுத் துள்ளார். மேலும், குற்றச்சாட்டுக்களை உண்மை என்று நிரூபித்தால் காஷ்மீர் அரசியலைவிட்டு விலகத் தயார் என்றும் அவர் கூறியதாக தெரிகிறது.

எனினும், மீட்பு பணிக்காக அவர் படகை எங்கிருந்து பெற்றார்? சமூக வலைத் தளங்களு க்கு அனுப்பப்பட்ட புகைப்படங்கள் குறித்து அவர் தெரிவிக்கவில்லை. தேசிய பேரிடர் மீட்புப் படை யினர் நிவாரணப் பொருட்களை சரியாக வழங்கவில்லை என்றும், பொதுமக்களுக்கு பொருட்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் மாலிக் குற்றம் சாட்டினார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









யாழ்.கல்வி வலயத்திலிருந்து கடந்த 2013 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெறுபேற்றினை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும் க.பொ.த சாதாரண தரத்தில் 9 ஏ, 8ஏ,பீ பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் 5 இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர் களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் இந் நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் என்.தெய்வேந்திரராஜா ஆகியோர் மாணவர்களுக்கு பதக்கம் அணிவிப்பதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# முதலமைச்சரை அவதூறு செய்த சுப்பிரமணியத்துக்கு சம்மன்!

முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்த அவதூறு வழக்கில் சுப்பிரமணியன்சுவாமிக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் சம்மன் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா சார்பில் மாநகர அரசு குற்றவியல் தலைமை வழக்கறிஞர் எம்.எல்.ஜெகன் தாக்கல செய்துள்ள மனுவில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, சாதி, மதம், இனம் என்று எவ்வித பாகுபாடுகளும் இல்லாமல் அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர் ஆவார். அவர், கடந்த 2011 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் பொதுமக்களின் பெரும் ஆதரவினை பெற்று முதல்வராக பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில், பா.ஜனதா கட்சியை சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி, தன்னுடைய 'டுவிட்டர்' இணையதளம் பக்கத்தில் கடந்த செப்டெம்பர் 11 ஆம் திகதி முதல்வர் பற்றி அவதூறான கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

அதில், ஜெயலலிதா அரசு தீவிரவத அமைப்புடன் நட்பாக உள்ளது. விடுதலைப்புலி இயக்கத்தின் நிர்வாகி மறைந்த திலீபன் என்பவரது நினைவு தினத்தை தமிழகத்தில் கடைப்பிடிப்பதற்கு பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர் என்று கூறியுள்ளார்.

இந்த கருத்தின் மூலம் தமிழக மக்கள் மத்தியில் முதல்வருக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, அவதூறான, ஆதாரமற்ற கருத்தினை இணையதளத்தில் வெளியிட்ட சுப்பிரமணியன் சுவாமி மீது அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேணடும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மனு மாவட்ட முதன்மை நீதிபதி ஆதிநாதன் முன்னிலையல் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒக்டோபர் 30 ஆம் திகதி சுப்பிரமணியன் சுவாமி நேரில் ஆஜராகும்படி சம்மன் அனுப்ப உத்தரவிட்டார்.

சுப்பிரமணியன் சுவாமி மீது ஏற்கனவே, முதல்வர் ஜெயலலிதா சாரபில் தொடரப்பட்டுள்ள இரண்டு அவதூறு வழக்குகளிலும் ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆஜராகும்படி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# இந்திய இடைத் தேர்தலில் பா.ஜ.கட்சிக்கு பின்னடைவு

## ஓய்கிறதா மோடி அலை

இந்தியாவில் நடந்து முடிந்த 33 சட்டமன்ற தொகுதிகள் மற்றும் மூன்று நாடாளுமன்ற தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவுகள் மத்தியில் ஆட்சி அமைத்திருக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கு அதிர்ச்சியைத தந்துள்ளது.

கடந்த மே மாதம் இந்தியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி இந்த இடைத் தேர்தல்களில் தோல்வியைத் தழுவியுள்ளது.

உத்தர பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் உள்ளிட்ட இந்தியாவின் 10 மாநிலங்களில் உள்ள மொத்தம் 33 சட்டமன்ற தொகுதிகளில் கடந்த செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி அன்று நடைபெற்ற இடைத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தின் இடைத்தேர்தல் முடிவுகள் பாரதிய ஜனதா கட்சிக்கு ஏமாற்றம் தந்துள்ளன.

பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற மொத்தம் 9 தொகுதிகளில் 3 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது, இதர 6 தொகுதிகளில் பாஜக கட்சி வெற்றி பெற்றுள்ளது.

பிரதமர் மோடி வென்றிருந்த வடோதரா மக்களவை தொகுதியை பாஜக தக்கவைத்துள்ளது.

ஆனால் அண்மையில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் குஜராத் மாநிலத்தில் 26 நாடாளுமன்ற தொகுதிகளிலும் பாரதிய ஜனதா கட்சியே பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் மாநிலத்தின் 4 சட்டமன்ற தொகுதிகளில் ஒரு தொகுதியில் மட்டுமே பாரதிய ஜனதா கட்சி வெற்றிபெற்றுள்ளது. மீதம் உள்ள 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றுள்ளது. ராஜஸ்தானிலும் பா .ஜ. க. ஆட்சியே நடைபெறுகிறது.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சி இரண்டு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

அம்மாநிலத்தின் ஆளும் கட்சியான சமாஜ்வாதி கட்சி மீதம் உள்ள ஒன்பது தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் உத்தர பிரதேச மாநிலத்தில் பாஜக கட்சி மாபெரும் வெற்றி பெற்றிருந்தது.

தற்போது இடைத்தேர்தல் நடைபெற்ற 11 தொகுதிகளிலும் பாஜகவும் அதன் கூட்டணி கட்சிகளும் முன்னர் வெற்றி பெற்றிருந்தன.

உத்தர பிரதேச மாநிலத்தின் இந்த முடிவுகள் இந்தியாவில் மோடி அலை ஓய்ந்துவருவதையே நிரூபிக்கிறது என அம்மாநில முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியை அம்மாநிலங்களிலிருந்து முற்றிலுமாக அகற்றி விடலாம் என்று பாஜக கட்சி கூறிவந்த நிலையில் இந்த இடைத்தேர்தல் முடிவுகள் அக்கட்சிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளன.

தற்போதைய இடைத்தேர்தல் முடிவுகள் எந்த தனிப்பட்ட கட்சிக்கும் ஆதரவாக அமையாமல் கலவையாகவே உள்ளது என்றாலும், தேர்தல் முடிவுகள் தொடர்பில் பா.ஜ.க. கட்சியின் சுயபரி சோதனை தேவை என்று பாரதிய கட்சி தலைவர் ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது உள்ளூர் பிரச்சினைகளின் அடிப்படையில் அமைந்துள்ள தேர்தல் என்றும், இதை தேசிய அளவிலான ஒரு கண்ணோட்டம் என்று சொல்லிவிட முடியாது என்று பாரதிய ஜனதா கட்சி தலைவர் ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவித்துள்ளார்.

இந்த தோல்வி தொடர்பில் பாரதிய ஜனதா கட்சி எந்த விளக்கங்களை அளித்தாலும், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் உத்தர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில் மாபெரும் வெற்றி பெற்ற பாஜக அம்மாநிலங்களில் பல தொகுதிகளை தற்போது இழந்து விட்டது என்பது தான் உண்மை என்று அரசியல் வல்லுனர்கள் கூறுகின்றனர். (இ)

## ஆணைய தலைவரை உடனடியாக நியமிக்குக

மாநில மனிதவுரிமைகள் ஆணைய தலைவரை உடனடியாக நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை உச்ச நீதிமன்றம் கேட்டு கொண்டுள்ளது.

அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதில் மனித உரிமைகள் ஆணையம் தவறிவிட்டதாக தொடரப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இதை விசாரித்த நீதிபதிகள் டிஎஸ் தாகூர, .ஆர். பானுமதி ஆகியோர் அடங்கிய அமர்வு, 2011 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் மனித உரிமைகள் ஆணையம் தலைவர் இல்லாமல் செயறபடுவது கவலை அளிக்கிறது.

அந்த பதவிக்கு தகுதியான தலைவரை தேர்வு செய்வதற்கான கமிட்டியை தமிழக அரசு அமைக்க வேண்டும்" என்றனர்.

மேலும், மாணவர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக சிபிஐ. விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், இந்த வழக்கை விசாரணை நீதிமன்றம் மூலம் விரைவாக விசாரிக்க வேண்டும் என்றும், இதை உயர் நீதிமன்றம் மேற்பார்வையிடவும் கேட்டுக் கொண்டனர்.(இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான கனவுகளில் இருந்துதான் பொறுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- டயானா ஹைடன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கடவுள் என்னிடம் வந்தால் என்ன வரம் கேட்பேன்?

வாழ்வின் ஒரு பகுதி கற்பனையில் செலவாகிறது என்பது உண்மையான தகவல். நிஜ வாழ்வை விட, கற்பனையில் இருக்கக் கூடிய வாழ்வு அற்புதமாக அமைவதுமுண்டு.

கற்பனையில் இரு பகுதி உண்டு. அதில் ஒன்று மகிழ்வானது. மற்றையது துன்பமானது. சிலர் துன்பமயமான கற்பனையில் மூழ்குவதில் ஏதோ ஒரு திருப்தி காண்கின்றனர். இத்தகையவர்கள் கவலையான பாத்திரங்களைக் கற்பனை செய்து அதில் தங்களுக்கும் ஓர் இடம் ஒதுக்கி அழுது ஆறுதல் அடைவர். இத்தகைய மனநிலை உடையவர்கள் தொடர் நாடகங்களில், வரும் சோகக் காட்சிகளில் தங்களையும் முழுமையாக ஈடுபடுத்தி அவற்றை நினைந்து நினைந்து அழுது கொள்வர்.

எனினும் பிறருக்காகக் கவலைப்படும் கழிவிரக்கம் என்று இதனைக் கூறிவிடமுடியாது. இது கற்பனையின் ஒரு பக்கம். இதன் மறுபக்கம் மகிழ்வான கற்பனையாகும். இக் கற்பனைக்காரர்கள் தம்மை உயர்ந்த பாத்திரங்களாகக் கற்பனை செய்து களிப்புறுவர்.

துன்பகரமான நிகழ்வுகள் நடக்கின்ற இடங்களில் சிரித்துக் கதைப்பவர்கள் இந்த இயல்புடையவர்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

எதுவாயினும் கற்பனை வாழ்வியல் தொடர்பில் நாம் முன்வைத்த கருத்துக்களுக்கு எந்த விதமான ? எவியல் சான்றுகளும் இல்லை என்பதும் இது நம் சிற்றறிவின் வகைப்படுத்தல் என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்வது நம் கடமை.

இவை அனைத்தும் ஒரு புறம் இருக்க, இப்போது ஒரு கற்பனை; கடவுள் நமக்கு முன்தோன்றி ? எக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டால் அதைக் கேட்பது என்பதே கற்பனையின் கரு.

அதர்மத்தை அழிக்க நல்லதொரு ஆயுதத்தை தாருங்கள் சுவாமி என்று கேட்டால், நம் நாட்டில் பலரை இழக்க வேண்டி வரும் என்பதால் அதனைக் கேட்பது சாத்தியமில்லை.

தமிழ் அரசியல்வாதிகளின் மனநிலை எப்படிப்பட்டது? அவர்களின் உண்மை நிலை என்ன? இவர்கள் தமிழ் மண் மீது கொண்ட பற்றின் சதவீதம் எவ்வளவு? என்பதை அறியும் திறனைத் தாருங்கள் இறைவா! என்று கேட்டால், எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் போதாதென்ற நிலைமை தோன்றும்.

சரி இவை எல்லாம் வேண்டாம்; வன்னி யுத்தத்தில் நடந்தது என்ன? காணாமல் போனவர்களுக்கு ஏற்பட்ட கதி யாது? என்று மனக்கண்ணால் அறிந்து அதனை வலம்புரியில் எழுதும் வரம்தா! என்று இறைவனைக் கேட்டால், வரம் பெறலாம். நாலாம் மாடியில் தவம் இருக்கவேண்டி வருமே! ஆகையால் அதுவும் பொருத்தமில்லை.

இந்தக் கற்பனை நேரத்தில்; எரிபொருள் விலைக் குறைப்பு, மின்சாரக் கட்டணம் கணிசமாக விடுவிப்பு என்ற செய்தியை அறிய முடிகிறது.

அட! நாட்டில் நல்ல சம்பவங்களும் நடக்கவே செய்கின்றன. நல்லன நடப்பதற்கு என்ன காரணம் என்று தேடிய போது, தேர்தல் என்பது தெரிய வந்தது. ஆம் ஊவா மாகாணத் தேர்தல் வேள்வி தான் இந்த விலைக்குறைப்புகள் என்பதால், இறைவனிடம்; சுவாமி ஒவ்வொருநாளும் நம் நாட்டில் தேர்தல் நடக்கும் வரம் தாருங்கள் என்று கேட்பதே மிகப் பொருத்தமானதும் நமக்கு ஆபத்தில்லாததும் மக்களுக்கு உதவியானதும் என்று உணர்ந்து, அதனையே வரமாகக் கேட்பேன்.

# உரிமைப் போராட்டத்தை தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது

## மாவை. எம்.பி.விளக்கம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எப்பொழுது தேர்தலை நடத்துவார் என பேசி வருகின்ற கலாநிதி தயான் ஜெயதிலகவுக்கு எங்களை உரிமைப் போராட்டம் நடத்த வேண்டாம் என்று சொல்கின்ற உரிமை கிடையாது என தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தொடர்ச்சியாக இந்த அரசினால் ஏமாற்றப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற இச் சந்தர்ப்பத்தில் எழுகின்ற குரலாகவே நாங்கள் இந்த அகிம்சை ரீதியான போராட்டத்தை அறிவித்திருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் அறவழிப் போராட்ட அறிவிப்பு அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதாக அமையும் என ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் மகிந்த ராஜபக்ஷ எப்போது தேர்தல் நடத்தவேண்டும் என்று ஆரூடம் பார்ப்பதில்லை.

எங்களுடைய இனம் அழிவின் விழிம்பில் நிற்கும்போது இராணுவமும் இந்த ஆட்சியாளர்களும் எங்களை முற்றுமுழுதாக அழிக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் எத்தனையோ முறை நாங்கள் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். போராட்டங்களையும் நடத்தியுள்ளோம். ஆனால் தொடர்ச்சியாக இந்த அரசாங்கத்தினால் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அச்சந்தர்ப்பத்தில் எழுகின்ற குரலாகவே நாங்கள் இந்த அகிம்சை ரீதியான போராட்டத்தினை அறிவித்திருக்கின்றோம்.

கலாநிதி தயான் ஜெயதிலக குறிப்பிட்டதைப் போன்று ஜனாதிபதித் தேர்தலோ அல்லது வேறு தேர்தல்களோ வருமாயின் அப்பொழுது நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கின்ற உரிமையும் எங்களுக்கு இருக்கின்றது. அதற்காக நாங்கள் எடுத்துள்ள இத்தீர்மானத்தை ஒருபொழுதும் மாற்றமாட்டோம். நாங்கள் எங்களுடைய போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுகின்ற வேலைத் திட்டங்களில் முழுமூரமாக ஈடுபட்டு வருகின்றோம்.

நாங்கள் எடுத்துள்ள தீர்மானம் சரியானது என்பதே எமது நிலைப்பாடாகும். தயான் ஜெயதிலக, மகிந்த ராஜபக்ஷ எந்தத் தேர்தலை நடத்தப் போகின்றார் என்று ஆரூடம் பேசிக் கொண்டு எங்களை உரிமைப் போராட்டம் நடத்த வேண்டாம என்று சொல்கின்ற உரிமை அவருக்குக் கிடையாது. அவரும் எங்களையும் எங்களின் போராட்டத்தையும் ஆதரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார். (இ)

# சிங்கள தேசத்தை ஏற்போருக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்

## பொது பல சேனா தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்தர்களின் தேசம் இலங்கை என்பதை ஏற்றுக்கொள்பவர்களுக்கே ஊவா மாகாண சபைத் தேர்தலில் மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என பொது பல சேனா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறான வேட்பாளர் தமிழராக, சிங்களவராக, முஸ்லிமாக இருந்தாலும் பிரச்சினையில்லை எனவும் பொது பல சேனாவின் தேசிய அமைப்பாளர் விதாரன் தெனியே நந்ததேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பொது பல சேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே விதாரன் தெனியே நந்ததேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்ட விரோத வர்த்தகங்களில் ஈடுபடுவோருக்கு மக்கள் வாக்களிக்க கூடாது. உலகில் எங்கும் இல்லாத தேர்தல் கலாசாரம் இங்கு காணப்படுகின்றது.

ஒருவருக்கொருவர் சேறுபூசிக் கொள்வதும் வன்முறைகளும் கொலைகளும் என கீழ்த்தரமான தேர்தல் கலாசாரமே காணப்படுகின்றது.

எந்தவொரு தொழிலுக்கு இணைய வேண்டுமானால் அதற்கு கல்வித் தகைமை உட்பட வேறு தகுதிகள், குடும்ப பின்னணி தேவை. ஆனால் இங்கு அரசியல் செய்வதற்கு எந்த விதமான கல்வி அறிவோ, தகுதியோ, குடும்ப பின்னணியோ தேவை இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கசிப்பு வியாபாரம் அல்லது போதைப் பொருள் வியாபாரம் என எந்த விதமான சட்டவிரோத வர்த்தகம் செய்பவர்களாக இருந்தாலும் அவர்களால் இங்கு அரசியல் செய்ய முடியும். தேர்தலில் போட்டியிட முடியும். இந் நிலை மாறவேண்டும். அதனை மக்களாலேயே மாற்ற முடியும். எனவே, ஊவா மாகாண சபைத்தேர்தலில் தகுதியானவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமான நாடு என்றும், எமது கலாசாரம் வரலாறு தெரிந்தவர்கள் எவராக இருந்தாலும் அவ்வாறான வேட்பாளர்கள் தமிழராக, சிங்களவர்களாக, முஸ்லிம் ஆக இருக்கலாம்.

இந்த நிலைப்பாடு கொண்ட வேட்பாளர்களை இத்தேர்தலில் வெற்றிபெற செய்ய வேண்டும் என விதாரன் தெனியே நந்த தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஏ-11)

# வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

(தும்பளை)

வரலாற்றுப் பிரசித்த பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-12)

# சத்திய தரிசனம்




## தாயாகப் பாருங்கள்

❖ நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். விருப்பம் போல அவரை வழிபடும் சுதந்திரம் நமக்கு உண்டு.

❖ அன்பில்லாத இதயம் வறண்ட பாலை நிலத்திற்குச் சமமானது. அன்பு இல்லாத மனிதர்கள் கடவுளை அடைவதில்லை.

❖ தண்ணீர் வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் மட்டும் தாகம் தீராது. அதைத் தேடிச் சென்று பருக வேண்டும். அதாவது, எதிலும் முயற்சி வேண்டும்.

❖ பெண்களைத் தாயாகக் காணும் பேறு பெற்றவனே மனிதர்களில் முழுமை பெற்றவன்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தவிர்க்க வேண்டியவை

+ குற்றம் சொல்வதைக் குணமாய்க் கொள்ளக்கூடாது. சோக நினைவுகளை அவ்வப்போது அசைபோட்டுச் சக நினைவுகளாக மாற்றிக் கொள்ளக் கூடாது.

+ நீரிலும் எண்ணெயிலும் தன் நிழலைப் பார்க்கக்கூடாது. தன்னைப் புகழ்ந்தும் பிறரை இழந்தும் பேசக்கூடாது. தன்னைத் தானே அவமதித்துக் கொள்ளக்கூடாது.

+ மற்றவரைக் கண்டு பொறாமை கொள்ளக்கூடாது.

+ பிறருடைய விடயங்களில் தலையிடக்கூடாது. அவர் என்ன செய்தார் என்று அறிய ஆவல் கொள்வதும் அக்கப்போர் செய்திகளைக் கேட்பதும் கூடாது.

+ வீட்டில் உள்ளவர்களிடம் அலுவலகத்தில் அன்றன்று நடப்பது பற்றியும் அங்குள்ளவர்களின் குறைகளைப் பற்றியும் தினம் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கக்கூடாது.

+ அடுத்தவர் பேச்சைக் கேட்டுச் செயற்படக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசொலி வி.கழகத்தை வீழ்த்தியது அச்சுவேலி கதிரொளி ரொக்கெட்





**அச்சுவேலி பிரதேசத்தின் எட்டு மென்பந்து கிரிக்கெட் கழகங்கள் இணைந்து நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான அச்சுவேலி முதல்வன் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் முரசொலி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது அச்சுவேலி கதிரொளி ரொக்கெட் விளையாட்டுக் கழகம்.**

லீக் முறையில் நடத்தப்பட்ட இச் சுற்றுப்போட்டியின் எட்டு அணிகளும் எதிரணிகளுடன் தலா ஒரு முறை மோதும் 36 போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களையும் பெற்ற முரசொலி, கதிரொளி ரொக்கெட், செங்கொடி, அச்சுவேலி மத்தி ஆகிய அணிகள் ப்ளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றன. முதலாவது தகுதிப் போட்டியில் முரசொலியை வீழ்த்தி கதிரொளி ரொக்கெட் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று விட, அச்சுவேலி மத்தியை வீழ்த்திய செங்கொடி வி.கழகத்தை இரண்டாவது தகுதி போட்டியில் வீழ்த்தி முரசொலி யும் இறுதிக்குள் நுழைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முரசொலி விளையாட்டுக் கழகமும், கதிரொளி ரொக்கெட் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முரசொலியின் அணித்தலைவர் முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தார். இதன்படி கதிரொளி ரொக்கெட் அணி முதலில் துடுப் பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர் மதுஷந்த் விரைவாக ஆட்டமிழந்த போதிலும் மறுமுனையில் நம்பிக்கை தந்த சார்லஸ் முரசொலி வீரர்களின் பந்துகளை துவம்சம் செய்தார். சீரான இடைவெளியில் இலக்குகள் சரிக்கப்பட்ட போதும் நான்காவது இணைப்பாட்டமாக டான்சனுடன் இணைந்து 55 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றார் சார்லஸ். பத்து ஓவர்களின் நிறைவில் கதிரொளி ரொக்கெட் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்களை குவித்தது. 6, ஆறு ஓட்டங்கள், 3, நான்கு ஓட்டங்கள் அடங்கலாக சார்லஸ் 56 ஓட்டங்களையும், 2 ஆறு ஓட்டங்கள் மற்றும் ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக டான்சன் 24 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். முரசொலி அணியின் காந்தரூபன், நிஷாந்தன், சுபேந்திரன் ஆகியோர் தலா இரண்டுஇலக்குகளைசாய்த்தனர்.

சற்று கடினமான வெற்றி இலக்கை துரத்தத் தொடங்கிய முரசொலி அணி முதல் ஓவரின் இரண்டாவது பந்திலேயே இலக்கை இழந்து தடுமாறத் தொடங்கியது. மூன்றாவது இணைப்பாக சோடி சேர்ந்த காந்தரூபனும் சுபேந்திரனும் அதிரடியாக ஆடிய போதிலும் மூன்றாவது ஓவரை வீசிய கதிரொளி ரொக்கெட்டின் செல்லா இருவரையுமே அடுத்தடுத்த பந்துகளில் வெளியேற்றி அதிர்ச்சியளித்தார். அடுத்து வந்த வீரர்கள் நிலைத்து நின்று ஆடாமல் ஒவ்வொருவராக வெளியேற முரசொலி அணி தனது பத்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களை பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக காந்தரூபன் 22 ஓட்டங்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் கதிரொளி ரொக்கெட் சார்பாக, செல்லா 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், நேருஜன் மற்றும் சார்லஸ் தலா 2 இலக்குகளையும் சாய்த்தனர். இறுதிப் போட்டியில் 56 ஓட்டங்களையும், 2 இலக்குகளையும் கைப்பற்றிய கதிரொளி ரொக்கெட்டின் சார்லஸ் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். லீக் சுற்றின் நிறைவில் 7 போட்டிகளில் சிறந்த பெறுதியாக ஆட்டமிழக்காத 57 ஓட்டங்களோடு 170 ஓட்டங்களை சேகரித்த இடைக்காடு விளையாட்டு கழகத்தின் கார்த்தீபன் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதையும் பணப் பரிசிலையும், 7 போட்டிகளின் நிறைவில் சிறந்த பெறுதியாக 22 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளுடன் மொத்தமாக 15 இலக்குகளை வீழ்த்திய அச்சுவேலி மத்திய விளையாட்டு கழகத்தின் செந்தூரன் சிறந்த பந்து வீச்சாளருக்குரிய விருதையும் பணப்பரிசிலையும்பெற்றுக்கொண்டனர்.

இறுதிப்போட்டியில் வெற்றியாளருக்குரிய கேடயத்தையும் பணப் பரிசிலையும் முரசொலி விளையாட்டு கழகத்தின் தலைவர் எஸ்.சுதாஸ் கரனும், இரண்டாமிடத்துக்கான கேட யத்தையும் பணப் பரிசையும் ரொக்கெட் விளையாட்டுக் கழக ஆலோசகர் தயாளனும் வழங்கி கௌரவித்தனர். (க)

## தேசிய மட்ட பளுதூக்கல் யாழ்.இந்து சம்பியன்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியின் சம்பியன் பட்டத்தை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கைப்பற்றியுள்ளது.

ஒரு தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக இந்த சாதனையைப்படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

இதில் பளு தூக்கும் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் கேகாலை மாவட்டம் அரநாயக்க திப்பிட்டிய ராஜகிரிய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன.

இதில் 17 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 56 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற ரி.விதுஷன் 121 கிலோ எடையைத்தூக்கி முதலிடத்தைப்பெற்று தங்கப்பதக்கம் வென்றார்.

77 கிலோ எடைப்பிரிவில் பி.பபிலன் 121 கிலோவையும் 85 கிலோ எடைப்பிரிவில் எஸ். மிதுன் 136 கிலோவையும் 94 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் மைத்ரேய சர்மா 127 கிலோவையும் 105 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் எஸ் .கிருஷிகன் 121 கிலோ எடையைத் தூக்கி இரண்டாம் இடங்களைப்பெற்று வெள்ளிப்பதக்கங்களை கைப்பற்றினர்.

50 கிலோ எடைப்பிரிவில் அஜித்ராம் 111 கிலோவையும் 94 கிலோ எடைப்பிரிவில் ஸ்ரீ.ஸ்ரீசன் 116 கிலோ எடையையும் தூக்கி மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கங்களை கைப்பற்றினர்.

19 வயதுப்பிரிவினர்களுக்கான போட்டியில் 85 கிலோ எடைப்பிரிவில் 172 எடையைத்தூக்கிய அபிஷேக் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றார்.

இவர்களுக்கான பயிற்று விப்பாளராகவும் பொறுப்பாசிரியராகவும் திருமாறன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் இந்தப்பளுதூக்கும் போட்டியின் 17 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விஷ்ணுகாந் 69 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்று 165 கிலோ எடையை தூக்கி இரண்டாம் இடத்தைப்பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)




சண்டிலிப்பாய்க் கோட்டம் நடத்திய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டியில் யா/ மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. முதலாம் இடத்தை பெற்ற விளையாட்டு வீரர்களையும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

## மாகாண மட்ட தடகளப் போட்டி

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாகாண மட்ட தடகளப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு ,ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.


ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமை ச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயும் இறுதி நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முத லமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி; சுண்டிக்குளி மாணவி தங்கம்



தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மாணவி 17 வயது இடைப்பிரிவில், வி.ஆஷிகா (வயது 13) பங்கு பற்றி 112 கிலோ கிராம் எடையை தூக்கி தங்கப்பதக்கம் பெற்றார். இம்மாதம் 10 ஆம் திகதி வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய பளுதூக்கல் போட்டியில் 120 கிலோகிராம் எடையை தூக்கி தங்கப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொல்கத்தா வெற்றி

அன்ரூ ரசலின் அதிரடியான ஆட்டம் மூலம் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் ஆரம்ப போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீழ்த்தி வெற்றி பெற்றது.

போட்டியின் நாணயசுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களை எடுத்தது. 158 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு ஆடிய கொல்கத்தா அணி 19 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தின் அன்ரூ ரசல் 25 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் உட்பட 58 ஓட்டங்களைக் குவித்தார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் அன்ரூ ரசல் தெரிவானார். (க)

# தங்கம் வென்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க. த.க பாடசாலையிலிருந்து தேசிய மட்ட கபடிப் போட்டியில் தங்கம் வென்ற 15 வயதுப் பிரிவு பெண்கள் அணியை வரவேற்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி லாசர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முன்னதாக வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டதை தொடர்ந்து பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

பெறப்பட்ட இவ் மகத்தான வெற்றிக்கு காரணமான வீராங்கனைகளை கௌரவிக்கும் இவ் நிகழ்வில் பாடசாலை நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், கல்விப் புலம சார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகத்தினர் அழைத்துள்ளனர். (க-23)

# பாகிஸ்தான் இருபது-20 கப்டனாக சஹிட் அப்ரிடி நியமனம்



2016-ம்ஆண்டுநடைபெறஉள்ள உலகக்கோப்பை தொடர் வரை பாகிஸ்தான் இருபது-20 கிரிக்கெட் அணியின் கப்டனாக சஹிட் அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

34 வயதான சகலதுறை வீரர் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி 2010-ல் நடந்த உலகக் கோப்பை இருபது-20 போட்டியில் அரையிறுதி வரை முன்னேறியது. அதன்பின்னர் நடந்த உலகக் கோப்பையிலும் (50 ஓவர்) அரையிறுதிக்கு முன்னேறியது.

ஆனால், 2011-ல் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் ஒரு நாள தொடரை வென்றபின்னர் பயிற்சியாளர் வக்கார் மற்றும் கிரிக்கெட் சபை தலைவர் இஜாஸ் பட் ஆகியோருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக அப்ரிடி நீக்கப்பட்டார்.

இதற்கிடையே கடந்த ஏப்ரல் மாதம் நடந்த உலகக்கோப்பை இருபது-20 தொடரின் முதல் சுற்றிலேயே பாகிஸ்தான் வெளியேறியதால் கப்டன் பதவியில் இருந்து மொஹமட் ஹபீஸ் விலகினார். அதன்பின்னர் அந்த பதவி நிரப்பப்படாமல் இருந்தது. இந்த பதவிக்கு அப்ரிடியை நியமிக்க வேண்டும் என சகல துறை வீரர் அப்துல் ரசாக் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில், 2016-ம் ஆண்டு நடைபெற உள்ள உலகக்கோப்பை தொடர் வரை இருபது-20 அணியின் கப்டனாக சஹிட் அப்ரிடி நியமிக்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செய்தி வெளியிட்டுள்ளது. டெஸ்ட்மற்றும்ஒருநாள்அணிகளின் கப்டனாக மிஸ்பா நீடிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 5-ம் திகதி டுபாயில நடைபெறும் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியின் மூலம் தனது கப்டன் பணியை அப்ரிடி தொடங்குகிறார். அதன் பின்னர் நியூசிலாந்துக்கு எதிராக டிசம்பர் மாதம் 3 போட்டிகளில் விளையாடுகிறார்.

அப்ரிடி இதற்கு முன்பு கப்டனாக இருந்த காலகட்டத்தில், பாகிஸ்தான அணி 19 சர்வதேச இருபது-20 போடடிகளில் விளையாடி 8-ல் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)




# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றது கரீபியன்ஸ்



பங்களாதேஷுக்குஎதிரானடெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள்-பங்களாதே அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் மற்றும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செயிண்ட் லூசியாவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 380 ஓட்டங்கள் எடுத்தது



இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி கேமர் ரோச்சின் அபாரமான பந்துவீச்சால் திணறியது. இதன்காரணமாக அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொர்டுத்து தனது முதல் இன்னிங்ஸை 161 ஓட்டங்களில் முடித்துக்கொண்டது.

219 ஓட்டங்கள்முன்னிலை என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர்

ஜோன்சன் 41 ஓட்டங்களும், பிராத்வெய்ட் 45 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மூன்றாம்நாள் ஆட்டநேர முடிவில் சந்தர்போல் 63 ஓட்டங்களுடனும், பிளாக்வுட் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

தொடர்ந்தும்தமது துடுப்பாட்டத்தை தொடங்கிய இருவரில் அபாரமாக விளையாடிய சந்தர்போல் சதம் அடித்தார்.


தனது இரண்டாவது இன்னிங்ஸில் 269 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

489 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் வீரர்களின் தொடக்கம் நன்றாக இருந்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய தமீம் இக்பால், ஷம்சுர் ரஹ்மான் ஆகியோர் முதல் விக்கெட்டுக்கு 47 ஓட்டங்களை சேர்த்திருந்த போது ஷம்சுர் 39 ஓட்டங்களில் ஆட்டமிழுந்தார். அவர் அதிரடியாக ஆடி 27 பந்துகளில் 39 ஓட்டங்கள் குவித்தார்.

5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்திருந்த பங்களாதேஷ் அணியில் பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் நடையை கட்டியதால் எஞ்சிய ஐந்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து இறுதியில 192 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் சார்பில் சுழற்பந்து வீச்சாளரான பென்ஸ் ஐந்து விக்கெட்டுகளை கைபற்றினார்.

இதனால் 296 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி தொடரையும 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. சந்தர்போல் ஆட்டநாயகனாகவும், பிராத்வெயிட் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (க)



# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் இரு நாள் கலைவிழா எதிர்வரும் சனி மற் றும் ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

நடனங்கள், நாடகங்கள் உட்பட பல்வேறு வகையான நிகழ்வுகள் அரங்கேறவுள்ள கலைவிழாவின் முதலாம் நாளில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் வழங்கும் வீரன்தாவீதன வடமோடி நாட்டுக் கூத்தும் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் மதுரையம்பதி (கண்ணகி) நாட்டிய நாடகம் ஆகியனவும் இடம்பெறும்.

இரண்டாம் நாளில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன் சிறப்பு நிகழ்வாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் குசேலா இசை நாடகமும் இடம்பெறும். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்...

அரசாங்கமும், பொலிஸ், இராணுவ பேச்சாளர்களும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் அமைப்பு என்ற ரீதியில் நாங்கள் இலங்கையில் முஸ்லிம் தீவிர வாதம் உள்ளதை வெளிப்படுத்த தயங்க மாட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் அமைச்சர்களின் நடமாட்டத்தை முடிந்தால் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நடமாட்டத்தையும் அரசாங்கம் கண்காணிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-11)

# வாழ்க்கை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த உடன்படிக்கைகளின் அடிப்படையில மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு வாய்ப்பு கிடையாது.

மாகாணசபைத் தேர்தலுக்கு சில தினங்கள் இருக்கும் நிலையில அரசாங்கம் எரிபொருள் விலையை குறைத்தமையின் மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ முன்னிலையில் அரசாங்கம் மண்டியிட்டுள்ளமை வெளிச்சமாகியுள்ளது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைப்பு தொடர்பில் ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

# நோர்வே...

அரச அதிபர் உள்ளிட்ட பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்திருந்தார். இதன்போது யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண அமைச்சர்கள், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோரைச் சந்தித்தார்.

இதன்போது வடக்கின் தற்போதைய நிலைமைகள் குறிப்பாக மத்திய அரசு மாகாண அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் என்பன தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# அமைச்சர்களுக்குத் தெரியாமல் எரிபொருட்களின் விலைக்குறைப்பு

உலக வர்த்தக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறைந்துள்ளதால், இலங்கையில் அதன் விலைகளை குறைக்க முடியாது என பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கடந்த 15-ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.

• அமைச்சர் அவ்வாறு கூறி 24 மணிநேரத்திற்குள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணங்களை குறைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

மின்சார கட்டணங்களை 25 வீதமாகவும் டீசலின் விலையை 3 ரூபாயினாலும் பெற்றோலின் விலையை 5 ரூபாயினாலும் மண்ணெண்ணெயின் விலையை 20 ரூபாயினாலும் குறைப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் தோல்வியடையும் என ஊகங்கள் வெளியாகியுள்ள நிலைமையில், ஜனாதிபதி இந்த விலை குறைப்பை அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஊவா தேர்தல் தோல்வியை தவிர்க்க ஜனாதிபதி எடுத்துள்ள இந்த இறுதி துரும்புச் சீட்டு குறித்து அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கு தெரியாது என தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# சவால்களை சமாளிப்பதில் இலங்கை அரசு முன்னேற்றம்

(கொழும்பு)

போருக்குப் பின்னரான சவால்களை சமாளிப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதாக சீனா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்துடன், உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணை விஸ்தரிக்கப்பட்டதையும் சீனா வரவேற்றுள்ளது.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு படைத்துறை அதிகாரிகள் மத்தியில் பரஸ்பர விஜயங்களை ஊக்குவிக்கவும் பயிற்சி மற்றும் படைத்துறை தொடர்பான தொழில் நுட்பங்கள், அது தொடர்பான கற்கை நெறிகள் போன்றவற்றை பரிமாறவும் இவ்விரு நாடுகளும் இணங்கியுள்ளன.

இவ்விருதரப்பும் பயங்கரவாதம், தீவிர வாதம் மற்றும் பிரிவினைவாதம் போன்றவற்றிக்கான தமது எதிர்ப்பையும் இந்த அறிக்கையில் வெளியிட்டுள்ளன. (எ-11)

# இராணுவத்தின் கடமை அரசைக் காப்பதல்ல- சரத்

சர்வாதிகார குணாதிசயங்களை கொண்ட தலைவர் தான் அல்ல என ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ள அவர், தான் சர்வாதிகார குணாதிசயங்களை கொண்ட தலைவர் என சிலர் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும் கூறியுள்ளார்.

இராணுவத்தில் ஒழுக்கத்தை பாதுகாக்க கடுமையாக நடந்து கொண்டாலும் பொது மக்களுடன் அரசியலில் ஈடுபடும் போது அப்படியான கொள்கையை கடைப்பிடிப்பதில்லை என்று தெரிவித்துள்ளார்.

நண்பர்களிடம் இருந்து கிடைக்கும் உதவிகள் மூலமே தற்போது வாழ்ந்து வருகிறேன் என்று கூறியுள்ள சரத் பொன்சேகா, வங்கி கணககுகள் முடக்கப்பட்டுள்ளதால், குறைந்த செலவில வாழ்க்கையை ஓட்டி வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராணுவத்தின் கடமை நாட்டை பாதுகாப்பதே அன்றி அரசாங்கத்தை பாதுகாப்பதல்ல என்றும் பொன்சேகா கூறியுள்ளார். (எ-11)

# அரச சேவையை புரிந்து கொள்ளுங்கள்

## ஜனாதிபதி

நாட்டுக்கு பாரிய சேவைகளை செய்யும் யுகத்தில் சரியாக புரிந்து கொள்ளாது அவதூறுகளை செய்வதும் அவமதிப்பதும் பழக்கமாகி விட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கும்போது அதனை புரிந்து கொள்ளாத சிலர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

சேர் அநாகரிக தர்மபாலவின் 150 ஜனன தின நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாடு செல்லும் பயணம் குறித்து அனைவரும் புரிந்து நடந்து கொள்வது அவசியமானது. நாட்டை முன்னேற்ற தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முககியமானவை என்று தெரிவித்தார். (எ-11)

# தமிழர்களு...

மக்களின் கோரிக்கையை வென்றெடுக்க போராட்டத்தை ஆரம்பிக்க போவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த யோசனை தொடர்பாக ஜனாதிபதி முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் குணதாச அமரசேகர குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# சீனாவின்...

இறுதி நேரத்திலேயே அறிந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீன ஜனாதிபதி தன்னுடைய விஜயத்திற்கு முன்னதாக பாரிய கடற்படைய கலங்களை இலங்கைக்கு அனுப்பி வைத்ததன் மூலமாக இலங்கை தன்னுடைய தேசத்தின பிடியிலுள்ள நாடு என்ற செய்தியை சொல்ல வருகிறாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளனர் அரசியல் ஆய்வாளர்கள்.

அதேவேளை அவர் இந்து சமுத்திரத்தின மீதான சீனாவின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் பிரதமரின் விஜயத்தின் போது இவ்வாறு பாரிய கடற்படை கலங்கள் இலங்கைக்குள் நுழையாததையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)

# வடக்கு அரசாங்கத்துடன்...

யுள்ளதாக யாழ்.ஆயர் தோமஸ சவுந்தரநாயகம் ஆண்டகை நோர்வேத் தூதுவரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, மத்திய அரசிற்கும வடக்கு மாகாண அரசிற்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கபட்டு இரண்டு அரசுகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்றும் இதனூடாகவே பாதிக்கபட்ட மக்களுக்கு பல்வேறு நன்மைகள கிடைக்குமென்றும் யாழ்.ஆயர் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான நோர்வே நாட்டுத் தூதுவர் கிறிட் லோன் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு யாழ் ஆயர இல்லத்தில் ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இச் சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு ஆயர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் ஆயர் தெரிவிக்கையில்,

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வே நாட்டுத் தூதுவர் இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் பலதரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள அதேவேளையில் இன்னும் பலதரப்பினர்களையும் தொடர்ச்சியாகச் சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றார். இதற்கமைய நேற்றைய சந்திப்பின் போதுவடக்கின் தற்போதைய நிலைமைகள் மற்றும் மக்களின் எதிர்ப்பார்ப்புக்கள் தொடர்பிலும் என்னிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது இங்குள்ள நிலைமைகள் தொடர்பிலும் எடுத்துக் கூறியிருந்ததுடன் குறிப்பாக மத்தியஅரசு மாகாண அரசுகளின் முரண்பாடுகள் பரஸ்பரகுற்றச்சாட்டுக்கள் குறித்தும் தூதுவரிற்கு விளக்கமளிக்கப்பட்டது. அதாவது மாவட்ட ஆயர்கள் ஜனாதிபதியை சந்திக்கும் சந்தர்ப்பத்தில் எனக்கும் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

வடக்கில் மாகாண அரசு அமைக்கப்பட்டு அந்த அந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசு ஒத்துழைப்புக் கொடுக்காது தொடர்ந்தும் தடையாகவே இருந்து வருகின்றமையினையிட்டு மனவருத்தம் அடைகின்றோம். ஆகவே மாகாண அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைப்புக் கொடுத்து மத்திய அரசு செயற்படவேண்டுமென்றும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டேன்.

இந்நிலையில் இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாகாணசபையுடன் இணைந்து பல்வேறு நன்மைகளைச் செய்வதற்குத் தயாராகவே இருப்பதாகவும் மாகாண அரசே மத்திய அரசுடன் ஒத்துழைக்காமல் செயற்படுவதாகவும் மத்திய அரசு ஏற்பாடு செய்கின்ற கூட்டங்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வருவதில்லை என்றும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவ்வாறு மத்திய அரசுடன் மாகாண அரசு முரண்பட்டு தனியே செயற்படுகின்ற போது எவ்வாறு இணைந்து செயற்பட முடியும்?. மாகாண அரசு எங்களுடன் ஒத்துழைத்தால் மாகாண அரசிற்கு நாம் பல நன்மைகளை செய்துகொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் இதன் போது ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு முதலமைச்சரைச் சந்தித்தும் கூறியிருந்தேன். இதன போது முதலமைச்சரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறியிருந்தார். அதாவது நாங்கள் எவ்வளவோ கோரிக்கைகள் முன் வைத்தும் ஏன் ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியுமே இராணுவ ஆளுநரை மாற்றமால் தொடர்ந்தும் நீடித்து வருகின்றனர்.

இவ்வாறு இராணுவ அதிகாரியான ஒருவர் சிவில் நிர்வாகத்திற்கு ஆளுநராக இருப்பதனால் எல்லாவற்றிற்கும் முட்டுக்கட்டையாகவே இருக்கின்றார். இதனால் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை முன்னெடுப்பதில் பாரிய சவால்களை எதிர் நோக்குவதுடன் பாதிப்புக்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது.

ஆகவே இந்த இரண்டுபகுதியினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை விடுத்து இணைந்து செயற்படவேண்டும். இவ்வாறு இணைந்து செயற்படுவதன் மூலமாகவே மக்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். இதனையே நோர்வே தூதுவரிடமும் கூறியிருக்கின்றேன்.

மேலும் இதன்போது வட பகுதிக்கு பாப்பரசர் வருவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதாவது பாப்பரசர் வருவது மற்றும் இதிலுள்ள நன்மைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பிலும் தூதுவர் என்னிடம் வினவியிருந்தார். அதாவது பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு எதிர்பார்ப்பது என்ன அவர் நல்லதொரு செய்தியைக் கொடுப்பாரா அல்லது அரசாங்கத்திற்கு ஏதும் செய்தி வழங்குவாரா என்பது தொடர்பிலும் தூதுவர் கேட்டிருந்தார்.

இதனையடுத்து பாப்பரசரின் விஜயத்தை வரவேற்கின்றோம். வடபகுதியின் மடுவிற்கு மட்டுமே செல்லவுள்ளதாகவும் அறிகின்றோம். ஆனால் அவரைச் சந்திப்பதற்கு மக்கள் தயாராகவே இருக்கின்றனர்.

அத்தோடுஅவர் அரசியல்வாதியல்ல; சமயவாதி. ஆகையால் அவர் அதற்குரிய செய்தியைக் கொடுப்பார் என்றும் ஆயர் மேலும் தெரிவித்தார். (எ-4)





| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | –20000 | O/W |
| கொழும்பு – சென்னை | –22000 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மலேசியா | –32000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | –32200 | RTN |
| கொழும்பு – சிங்கப்பூர் | –30800 | RTN |
| கொழும்பு – சிட்னி | –58000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | –32000 | RTN |
| கொழும்பு – மிலான் | –57800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – லண்டன் | –45400 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – ஜேர்மன் | –71500 | RTN |
| கொழும்பு – நியூசிலாந் | –88700 | O/W |
| கொழும்பு – கனடா | –105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குவர்

#128, Brown Road, Jaffna
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org